# அமைச்சரவையின் நடவடிக்கைகள் பற்றிய கைநூல்

**2024**

**அமைச்சரவை அலுவலகம்**
**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

# பொருளடக்கம்


**அறிமுகம்** ..... 3

குடியரசு, இறைமை மற்றும் பாராளுமன்ற சனநாயகம் ..... 3

இலங்கையின் அரசியலமைப்பு ..... 4

ஆட்சித்துறை - பாராளுமன்றம் ..... 4

நிறைவேற்றுத்துறை ..... 5

சனாதிபதி ..... 5

அமைச்சரவை ..... 6

நீதித்துறை ..... 6

**முதலாம் அத்தியாயம்**

**அமைச்சரவையினால் தீர்மானம் மேற்கொள்ளல்** ..... 7

அமைச்சரவையின் கட்டமைப்பும் பொறுப்பும் ..... 7

அமைச்சரவைத் தீர்மானங்களை எடுக்கும் கோட்பாடுகள் ..... 7

அமைச்சரவை குழுக்கள் ..... 9

அமைச்சரவை உபகுழுக்கள், அமைச்சர் குழுக்கள் மற்றும் உத்தியோகத்தர் குழுக்கள் ..... 12

அமைச்சரவைக்கு அமைச்சரவைப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் ..... 13

அமைச்சரவைப்பத்திரங்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பிலான வழிகாட்டுதல்கள் ..... 14

கருத்துக்களைக் கோரும் தேவையும் முறையான நடைமுறையும் ..... 30

அமைச்சின் விடய நோக்கெல்லைக்குரிய பணிகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் கருத்துக் கோரல் ..... 31

அரசியல் கருத்துக் கோரல் ..... 31

அமைச்சுக்களிடமிருந்து கருத்துக் கோரல் ..... 31

நியதிச்சட்ட ஆலோசனை செயல்முறைகள் ..... 32

பொதுமக்கள் ஆலோசனை ..... 32

அமைச்சரவையின் நடவடிக்கைகள் தொடர்பிலான இரகசியத்தன்மை ..... 33

அமைச்சரவைத் தீர்மானங்களை ஊடகத்திற்கு அறிவித்தல் ..... 33

அமைச்சரவைப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு மற்றும் தாமதமாக கிடைக்கும் அமைச்சரவைப்பத்திரங்கள் ..... 33

அமைச்சரவைப்பத்திரங்களுக்கான திருத்தங்கள் ..... 34

அமைச்சரவைப்பத்திரங்களை மீளப்பெறுதல் ..... 34

அமைச்சரவைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரல் மற்றும் அமைச்சரவைக் குழுக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரல் ........ 35

ஏதேனும் விடயமொன்று சம்பந்தமாக அமைச்சரவைக்கு வாய்மொழிமூல விடயங்களைச் சமர்ப்பித்தல் ........ 35

அமைச்சரவை மற்றும் அமைச்சரவை குழு கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக்குறிப்புகள் ........ 36

அமைச்சரவைக் கூட்டங்கள் ........ 37

கூட்டங்களில் தலைமை வகித்தல் ........ 37

அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் குழுக் கூட்டங்களுக்கும் அமைச்சர்களின் வருகை ........ 37

அமைச்சரவைக் கூட்டங்கள் மற்றும் குழுக் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் ........ 38

அமைச்சரவைக் கூட்டங்களில் அதிகாரிகளின் பங்குபற்றுதலும் அழைப்பின் பேரில் வருகையும் ........ 38

அமைச்சரவைக் குழுக் கூட்டங்களில் அதிகாரிகளின் வருகை ........ 39

அமைச்சரவைச் செயலாளர் மற்றும் அமைச்சரவை அலுவலகம் ........ 39

**இரண்டாம் அத்தியாயம்**

**அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டம் ........ 40**

அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் ........ 40

அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல் ........ 40

அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தைக் கண்காணித்தல் ........ 42

சட்டவாக்க ஒருங்கிணைப்பாளர் ........ 42

அரசாங்க சட்டவாக்க செயற்பாடு ........ 42

சட்டவரைநருக்கு ஏற்புடையதான பணிகளும் சட்டவரைநரினால் சட்டங்களை வரையும் செயற்பாடும் ........ 43

அரசாங்க சட்டவாக்க செயற்பாட்டிற்கு ஏற்புடையதான சட்டமா அதிபரின் பணி ........ 45

**மூன்றாம் அத்தியாயம்**

**அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்றம் ........ 46**

பாராளுமன்றத்தில் அமைச்சர்களினால் செய்யப்படும் கூற்றுக்கள் ........ 46

வாய்மொழிமூல அல்லது எழுத்துமூல விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களுக்கு பதிலளித்தல் ........ 46

**நான்காம் அத்தியாயம்**

**அமைச்சரவைத் தீர்மானங்கள், அமைச்சரவைப்பத்திரங்கள் மற்றும் அது சார்ந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழி ........ 47**

பொது ........ 47

அமைச்சர்கள் மற்றும் உத்தியோகத்தர்களினால் அமைச்சரவைத் தீர்மானங்கள், அமைச்சரவைப்பத்திரங்கள் மற்றும் அது சார்ந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழி ........ 48

## அறிமுகம்

### குடியரசு, இறைமை மற்றும் பாராளுமன்ற சனநாயகம்

இலங்கை சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட சனநாயக சோசலிசக் குடியரசாகும் என்பதோடு, இது ஒற்றையாட்சி உடைய அரசாகும். குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகவும் பாராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்.

மக்களின் இறைமை பிரயோகிக்கப்படும் போதும் அனுபவிக்கப்படும் போதும் மக்களது "சட்டமாக்கற்றத்துவம்" மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட பாராளுமன்றத்தினாலும் மக்கள் தீர்ப்பொன்றின் போது மக்களால் நேரடியாகவும், இலங்கையின் பாதுகாப்பு உள்ளிட்ட "மக்களது ஆட்சித்துறைத்தத்துவம்" மக்களால் தெரிவுசெய்யப்படும் குடியரசுச் சனாதிபதியினாலும் மக்களது "நீதிமுறைத் தத்துவமானது" பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன பற்றிய கருமங்கள் தவிர, அரசியலமைப் பினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட அல்லது அரசியலமைப்பினால் அங்கீகரிக் கப்பட்ட அல்லது சட்டத்தினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள், நிறுவனங்கள் ஆகியன மூலமும் பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

அரசியலமைப்பினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அடிப்படை உரிமைகள் அரசாங்கத்தின் எல்லா நிர்வாக நிறுவனங்களாலும் போற்றப்படவும் பேணப்படவும் ஏற்றமளிக்கப்படவும் வேண்டும் என்பதோடு, குறித்த அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு இருக்கவேண்டுமே யொழிய குறைக்கப்படவோ மட்டுப்படுத்தப்படவோ இல்லாதொழிக்கப்படவோ ஆகாது.

பதினெட்டு வயதை அடைந்துள்ள ஒருவர் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு வாக்காளர் ஒருவராக தகுதி பெறுவதற்கு தமது பெயரை தேருநர் இடாப்பில் பதிந்துள்ள அனைத்து பிரசைகளும் குடியரசின் சனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தலிலும் மக்கள் தீர்ப்பொன்றிலும் வாக்குரிமையை பிரயோகிப்பதற்கு தகைமையுடையவராவர்.

மக்களுக்கு விரிவானதும் தொடர்ச்சியானதுமான பொறுப்புக்கூறலை உறுதி செய்யு முகமாகத் தேர்தல்கள் குறைந்தது ஒவ்வொரு ஐந்து ஆண்டிலும் நடாத்தப்படும். தேர்தல் வேட்பாளர்கள் சுயேட்சையாகவோ அரசியல் கட்சிகளைப் பிரதிநித்துவப் படுத்தியோ தேர்தலில் போட்டியிடலாம்.

## இலங்கையின் அரசியலமைப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்மையான சட்டம் அரசியலமைப்பாகும்.

1972 ஆம் ஆண்டின் முதலாவது இலங்கை அரசியலமைப்பை இல்லாதொழித்து 1978 ஆண்டு செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி பாரராளுமன்றத்தினால் விதித்துரைக் கப்பட்ட 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது இலங்கை அரசியலமைப்பானது இந்த நாட்டின் அரசியலமைப்பாக இருந்துவருகின்றது. 1948 ஆம் ஆண்டில் பிரித்தானிய பொதுநலவாயத்துள் இலங்கை குடியேற்ற நாடாக சுதந்திரம் பெற்றதன் பின்னர் மூன்றாவது அரசியலமைப்பாகும்.

பொது மக்களினதும் அரசாங்கத்தினதும் தத்துவங்கள் வரையறைகள் என்பன அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் நிறைவேற்றுத்துறை, ஆட்சித்துறை மற்றும் நீதித்துறை போன்ற குடியரசின் பிரதான நிறுவனங்கள், அரசியலமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பவற்றுக்கிடையில் அதிகாரங்கள் பகீர்ந்தளிக்கப்பட்டுள்ள விதம் பற்றி விரிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியலமைப்பானது, பிரசைகளின் அடிப்படை உரிமைகள் உட்பட மொழி உரிமையையும் உறுதிப்படுத்தியுள்ளதோடு, இந்த உரிமைகள் ஏதேனும் மீறலினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆள் ஒருவர் அம்மீறலுக்காக உயர் நீதிமன்றத்தை நாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசாங்க அலுவலர்களினால் அரசாங்க கூட்டுத்தாபனங்கள், உள்ளுராட்சி நிறுவனங்கள் மற்றும் அத்தகைய வேறு ஏதேனும் நிறுவனங்களின் அலுவலர் களினால் நிகழக்கூடிய அடிப்படை உரிமை மீறல் தொடர்பிலும் வேறு முறைக்கேடுகள் தொடர்பிலுமான முறைப்பாடுகள் அல்லது குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து அறிக்கையிடக்கூடிய நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையளார் (Ombudsman) சார்பிலும் அரசியலமைப்பின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஆட்சித்துறை - பாராளுமன்றம்

பாராளுமன்றம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையத் தெரிவு செய்யப்படும் மற்றும் நியமிக்கப்படும் இருநூற்றி இருபத்தைந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாராளுமன்றமும் அதன் முதலாவது கூட்டத்திற்கென நியமிக்கப்படும் தினத்திலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு நிறுவப்படும்.

தனது சட்டவாக்க அதிகாரங்களைப் பிரயோகிப்பதில் பாராளுமன்றம் இறைமை கொண்டதாகும். எனினும் அதன் பணிகளை நடைமுறைப்படுத்தும் போது

அரசியலமைப்பிலுள்ள சில ஏற்பாடுகளின் மூலமும் பாராளுமன்றம் அதன் சட்டங்கள் மூலமாகவும் பல்வேறு வழிகளில் கட்டுப்படுத்தப்படுகிறது.

சட்டவாக்கம் மற்றும் பொது நிதி மீது பாராளுமன்றத்திற்கு ஒட்டுமொத்தக் கட்டுப்பாடு உண்டு. பாராளுமன்றத்திலிருந்து அதற்கு அதிகாரம் கிடைக்காதுவிடில் அரசாங்கம் வரிகளை விதிக்க, கடன்களைப் பெற அல்லது பொது நிதியைச் செலவு செய்தலாகாது. அதேபோன்று நிறைவேற்றுத்துறையின் செயற்பாடுகளை ஆராய்தல் நாளாந்த பிரச்சினைகளை ஆராய்தல் போன்ற பணிகளும் பாராளுமன்றத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளன.

நடைமுறையிலுள்ள அரசாங்கம் நாளாந்த செயற்பாடுகளுக்காக முக்கியமாகப் பாராளுமன்றத்திற்குப் பதிலளிக்க வேண்டும். துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் / அமைச்சரவை ஆலோசனைக் குழுக்கள், தெரிவுக்குழு முறைமை, பாராளுமன்ற வினாக்கள், வாய்மொழிமூல மற்றும் எழுத்துமூல அறிக்கைகள் மற்றும் விவாதங்கள் ஆகிய பொறிமுறைகளின்மூலம் பாராளுமன்றம் இந்தப் பணியினை செயற்படுத்துகின்றது.

தமது தொகுதி மக்கள் சார்பாகப் பேசுவதற்கும், கடிதத் தொடர்புகள் மேற்கொள்வதற்கும் அத்துடன் தேவையானவிடத்து, தீர்வுகளை நாடுவதற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மேடையை வழங்குகின்ற பாராளுமன்றத்தில் இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்களும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன.

## நிறைவேற்றுத்துறை

**சனாதிபதி**

இலங்கைக் குடியரசின் சனாதிபதியே அரசின் தலைவராவார் என்பதோடு, அவர் ஆட்சித் துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும் ஆயுதந்தாங்கிய படைகளின் படைத் தலைவருமாவார்.

சனாதிபதி இலங்கை மக்களினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, ஐந்து வருட காலப்பகுதிக்கு அல்லது அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்றம் சனாதிபதி ஒருவரை தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பத்தில் பதவியினை வறிதாக்கிச் செல்லும் சனாதிபதியின் பதவிக்காலத்தில் முடிவுறாது எஞ்சியுள்ள காலத்திற்கு மட்டுமே அப்பதவியை வகித்தலும் வேண்டும்.

பாராளுமன்றத்தில் அரச கொள்கை கூற்றை மேற்கொள்தல், பாராளுமன்றத்தின் அமர்வு ஒவ்வொன்றின் ஆரம்பத்தில் செய்திகளை வழங்குதல், தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களை நடாத்துவதற்கு பொருத்தமான சூழலை உறுதிப்படுத்துதல் போன்ற அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு என்பதோடு, அவர் அரசியலமைப்பை பாதுகாத்து பேணவும் வேண்டும். அரசியலமைப்பின் கீழான தனது அதிகாரங்கள், கடமைகள்

மற்றும் பணிகள் ஆகியவற்றைப் பிரயோகிப்பதில் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக பதில் கூறவேண்டும். சனாதிபதிக்குரிய சில தத்துவங்கள் அரசியலமைப்பின் மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கும் பாராளுமன்ற அதிகாரங்களுக்கும் உட்பட்டதாகும்.

**அமைச்சரவை**

அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் பிரகாரம் குடியரசின் அரசாங்கத்தை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான நிறைவேற்றுத்துறை பொறுப் பானது அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு அமைச்சரவை கூட்டாகப் பொறுப்பு வகிக்கும் என்பதோடு, பாராளுமன்றத்திற்குப் பதில் கூறவும் வேண்டும்.

குடியரசின் சனாதிபதி அமைச்சரவையின் தலைவர் ஆவார் என்பதோடு, அமைச்சரவையானது, பிரதம அமைச்சரையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இருந்து நியமிக்கப்படும் அமைச்சர்கள் ஆகியோரையும் கொண்டிருக்கும்.

**நீதித்துறை**

நீதித் துறையானது, தனது தீர்மானங்களில் சட்டத்திற்குப் பொருள் கூறுவதோடு அவற்றைப் பிரயோகிக்கவும் செய்கின்றது. நீதியின் சமமான நிர்வாகத்தை உறுதிசெய்யும் வண்ணம் அன்றைய அரசாங்கம் மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு அது சுதந்திரமானதாகவும் நியாயமானதாகவும் பக்கசார்பற்றதாகவும் இருக்க வேண்டுமென்பது நீண்டகாலமாக நிறுவப்பட்டுள்ள அரசியலமைப்பு ரீதியான கோட்பாடாகும். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், ஏனைய அமைச்சர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஆகியோர் நீதித்துறையின் தொடர்ச்சியான சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கான ஒரு கடமையைக் கொண்டுள்ளார்கள் என்பதோடு, குறிப்பிட்ட நீதித்துறைத் தீர்மானங்கள் மீது எவ்வித செல்வாக்கையும் பிரயோகிக்க முயலவும் கூடாது.

## முதலாம் அத்தியாயம்
## அமைச்சரவையினால் தீர்மானம் மேற்கொள்ளல்

### அமைச்சரவையின் கட்டமைப்பும் பொறுப்பும்

1.1 அமைச்சரவையே நிறைவேற்று அரசாங்கத்தின் தீர்மானங்களை எடுக்கும் மைய அமைப்பாகும். அது, அரசாங்க கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத் திட்டங்கள், நிர்வாக மற்றும் அரசாங்கத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் பொதுமக்கள் நலன்சார்ந்த கரிசனைக்குரிய மற்றும் சர்ச்சைக்குரிய விடயங்கள் பற்றி ஏனைய அமைச்சரவை உறுப்பினர்களுக்கு அறியத்தருவதற்குமான ஒரு கூட்டு மன்றமாகும்.

1.2 அரசியலமைப்பின் 43(1) ஆம் உறுப்புரைக்கு அமைவாக குடியரசின் அரசாங்கத்தை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான பொறுப்பு அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு, 43(2) ஆம் உறுப்புரைக்கு அமைவாக பாராளு மன்றத்திற்கு கூட்டாகப் பொறுப்பாயிருத்தலும் மறுமொழி கூறற்பாலதாய் இருத்தலும் வேண்டும்.

1.3 சனாதிபதி அமைச்சரவையின் ஓர் உறுப்பினர் ஆவார் என்பதோடு, அவரே அமைச்சரவையின் தலைவருமாவார். சனாதிபதி பாராளுமன்றத்தின் உச்ச நம்பிக்கையை வென்றவரான ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப் பிரதம அமைச்சராக நியமிப்பார். ஏனைய அமைச்சரவை அமைச்சர்கள் பிரதம அமைச்சரோடு கலந்தாலோசித்து சனாதிபதியினால் நியமிக்கப்படுவதோடு, அவர்களுக்கு விடயங்கள் மற்றும் பணிகள் கையளிக்கப்படும். இலங்கையின் பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராக சனாதிபதி இருப்பார். சனாதிபதி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் ஆகியோரைப் பிரதம அமைச்சரோடு கலந்தாலோசித்து நியமிப்பார். அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை முப்பதை (30) விஞ்சுதலாகாது. அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை நாற்பதை (40) விஞ்சுதலாகாது.

### அமைச்சரவைத் தீர்மானங்களை எடுக்கும் கோட்பாடுகள்

1.4 அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானித்தல், மேம்படுத்துதல், அதன் சார்பில் தோற்றுதல், அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பிலான விடயங்கள் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் பதிலளித்தல் என்பன அமைச்சரவை உறுப்பினர்களின் பொறுப்பாகும். இது கூட்டு பொறுப்பின் (Collective responsibility) அடிப்படையிலான செயற்பாடாகும் என்பதோடு, அமைச்சரவையின் சகல

தீர்மானங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் சகல உறுப்பினர்களும் கூட்டாகப் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

அமைச்சரவையின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு விடயம் சம்பந்தமாகவும் அவர்களுடைய கருத்துக்களையும் அவதானிப்புரைகளையும் தெரிவிப்பதற்கும் இறுதித் தீர்மானத்தினை எடுக்கும் பொருட்டு கலந்துரை யாடுவதற்கும் விவாதங்களை மேற்கொள்வதற்கும் அமைச்சரவையின் உறுப்பினர் களுக்கு இயலுமாகும். அமைச்சரவையினால் எடுக்கப்படும் இறுதித் தீர்மானம் அவர்களுடைய தனிப்பட்ட கருத்துக்களுடன் உடன்படாவிட்டாலும் அவர்கள் உரிய அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளாவிட்டாலும் அமைச்சரவை யின் இறுதித் தீர்மானம் சார்பில் பொறுப்புக் கூறுவதற்கு அமைச்சர்களானவர்கள் கட்டுப்பட்டுள்ளார்கள். அதேபோன்று அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் அமைச்சரவை உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தான கூட்டு பொறுப்புக் கோட்பாட்டுடன் கட்டுப்படுவர்.

1.5 அமைச்சரவை தீர்மானம் எடுக்கும் அதன் செயற்பாட்டின் போது அரசியலமைப்பின் VI ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க கொள்கையை நெறிப்படுத்தும் கோட்பாட்டிற்கு மதிப்பளித்து செயற்படுதல் வேண்டும்.

1.6 அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அல்லது வேறு சட்டமொன்றின் கீழ் அத்தகைய ஏதேனும் அதிகாரபீடத்திற்கு அல்லது அதிகாரிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடமைகளுக்கு அமைச்சரவை தலையிடுதல் ஆகாது.

1.7 அமைச்சரவையினால் கொள்கைத் தீர்மானங்களும் அதேபோன்று நிர்வாக ரீதியிலான தீர்மானங்களும் எடுக்கப்படும். அமைச்சரவையினால் எடுக்கப்படும் நிர்வாக ரீதியிலான தீர்மானங்கள் நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்டதாகும். அமைச்சரவையினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்கள் சம்பந்தமாக நீதிமன்றமானது பொதுவாக தலையிடமாட்டாது. ஆயினும், சட்ட நியாயத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் எதேச்சையான, தர்க்க ரீதியிலற்ற, காரணமற்ற தற்றுணிபின் பேரிலான தீர்மானங்கள் அமைச்சரவையினால் எடுக்கப்படுமாயின் அது சம்பந்தமாக தலையிடுவதற்கு உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரமுள்ளதென அண்மைக்கால உயர் நீதிமன்ற தீர்மானங்களின் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

1.8 அரசியலமைப்பின் 55(1) ஆம் உறுப்புரைக்கு அமைவாக அரசாங்க உத்தியோகத் தர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகள், ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் மற்றும் பதவி நீக்கம் அடங்கலாக அரசாங்க உத்தியோகத்தர் களுக்குரிய சகல கொள்கை விடயங்கள் சம்பந்தமாகவும் ஏற்பாடுகளை செய்யும் அதிகாரம் அமைச்சரவைக்குரியதாகும். பொதுவாக அரசாங்க ஊழியர்களைப் பாதிக்கும் விடயங்கள் சம்பந்தமாக இருக்க வேண்டுமெயொழிய தனியாட்கள் அல்லது குழுக்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் இந்த அதிகாரமானது பயன்படுத்த முடியாதென பல்வேறு சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்றத்தினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

1.9 அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரைக்கு அமைவாக அரசாங்கத்தின் சகல திணைக்களத் தலைவர்கள் (மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள் உட்பட) நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், அவர்களின் விடயத்திற்குரியதான ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் என்பன அமைச்சரவையினால் மேற்கொள்ளப்படும்.

1.10 கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் போது பிழையற்ற தரவுகள் மற்றும் சாட்சிகளை அடிப்படையாகக் கொள்வதற்கும் சகல விடயங்களையும் கவனத்திற்கொள்வதும் அவசியமாகும். மேலும், பொது மக்கள் நலனின் பொருட்டு மிகவும் பொருத்தமான கொள்கை மற்றும் நிர்வாக ரீதியாக தீர்வுகளைத் தெரிவுசெய்யும் போது அதனால் பாதிக்கப்படும் தரப்பினர்களின்பால் செவிமடுப்பது அவசியமானதாகும்.

1.11 அமைச்சரவை தனது நடைமுறைகளைத் தானே தீர்மானித்து ஒழுங்குப்படுத்தும். அமைச்சரவைக் கூட்டங்கள் நடாத்தப்படும் திகதி உட்பட நடைமுறைகள் தொடர்பான இறுதித் தீர்மானம் அமைச்சரவையின் தலைவராக சனாதிபதிக்கு உரியதாகும்.

## அமைச்சரவை குழுக்கள்

1.12 அமைச்சரவைக்குள்ள பணிகளை குறைப்பதன் மூலம் அரசாங்கத்தின் பணிகள் தொடர்பிலான செயற்பாடுகளை மிகப் பயனுள்ள வகையில் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு அமைச்சரவைக் குழுக்கள் ஒத்தாசை நல்கும். கூட்டு பொறுப்பு கோட்பாடு அமைச்சரவைக் குழுக்கள் சம்பந்தமாகவும் ஏற்புடையதாகும். சிபாரிசுகளை அமைச்சரவைக்கு ஆற்றுப்படுத்துவதற்கு முன்னர் உரிய உத்தியோகத்தர்களுடனும் தரப்பினர்களுடனும் விரிவாக விடயங்களை கலந்துரையாடுவதற்கு அமைச்சரவை குழுவினால் சந்தர்ப்பம் வழங்கப்படும். அதற்கிணங்க அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞா பனங்கள் சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்காக முதலில் உரிய அமைச்சரவை குழுக்களுக்கு தொடர்புபடுத்தப்படும்.

1.13 அரசாங்க கொள்கை, நிதிப் பணிகள், செலவினங்களை முகாமித்தல், சட்டவாக்க பணிகள், அரசாங்க சேவை மற்றும் நிர்வாகம் போன்ற துறைகளுக்குரிய விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவைக்கு சிபாரிசுகளை முன்வைப்பதற்கு அமைச்சரவை குழுக்களைத் தாபிக்கலாம்.

1.14 அமைச்சரவை குழுக்கள் அமைச்சரவையில் இருந்து தமது அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் அனைத்து அமைச்சரவை குழுக்களினதும் சிபாரிசுகள் பரிசீலனைக்கும் அனுமதிக்கும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்பதோடு, மேற்கொள்ளும் இறுதி அதிகாரத்தை அமைச்சரவை தன்வசம் வைத்திருக்கும்.

1.15 அமைச்சரவை குழுக்களின் சிபாரிசுகள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் படும்வரை அவற்றின்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படலாகாது. சந்தர்ப்பத்திற் கேற்றவாறு அமைச்சரவையினால் அமைச்சரவை குழுக்கள் அல்லது குறித்துரைக்கப்பட்ட அமைச்சர்கள் குழுக்களுக்கு தெளிவாக அறுதியிடப்பட்ட ஒரு விடயம் தொடர்பாக, "உடனடியாக செயல்படுவதற்கான அதிகாரம்" அமைச்சரவையினால் "அமைச்சரவைக் குழுவிற்கு" அல்லது குறித்த காரணத்திற்காக நியமிக்கப்பட்ட "அமைச்சரவை உபகுழுவிற்கு" அல்லது "அமைச்சர்கள் குழுவிற்கு" கையளிக்கப்படலாம். ஒரு குறிப்பிட்ட அமைச்சரவை குழுவொன்றினால் அல்லது குறித்துரைக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவினால் செயல்படுவதற்கான அதிகாரத்தின் கீழ் சிபாரிசினை மேற்கொள்ளுமிடத்து குறித்த சிபாரிசின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும். உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் சிபாரிசுகள் சார்பில் அமைச்சரவையின் தழுவு அங்கீகாரம் உடனடியாக பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

1.16 அமைச்சரவைக் குழுக்களின் கட்டமைப்பு மற்றும் உறுப்பாண்மை, தவிசாளர் மற்றும் ஒவ்வொரு அமைச்சரவை குழுவினதும் செயலாற்று நியதிகள் (Terms of Referance) ஆகியவன சனாதிபதியின் சிபாரிசின் மீது அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும். அமைச்சரவை குழுக்களின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கு நிர்வாக ரீதியிலான மற்றும் செயலக ரீதியிலான ஒத்துழைப்பு அமைச்சரவை அலுவலகத்தினால் வழங்கப்படுதல் வேண்டும்.

1.17 அமைச்சரவையினால் பின்வரும் அமைச்சரவை குழுக்கள் நியமிக்கப்படலாம் -

(I) அரசாங்க கொள்கை மற்றும் செலவினங்களை முகாமித்தல் தொடர்பிலான அமைச்சரவை குழு -

அரசாங்கத்தின் கொள்கை, அரசாங்க செலவுகள் பற்றிய தாக்கம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்படும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நிதிப் பணிகள் உட்பட பிற பொருளாதார தாக்கங்கள் பற்றிய விடயங்களுக்குரிய ஏதேனும் அமைச்சரவைப் பத்திர மொன்றிலுள்ள பிரேரிப்புகளை ஆழமாக ஆராய்ந்து அமைச்சரவைக்கு பொருத்தமான சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக இந்த குழுவை தாபிக்கலாம். அதேபோன்று அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அரசுடமை கம்பனிகள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்கு / நிதிக் கூற்றுக்கள் அல்லது வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் என்பவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தினை வழங்குவதற்கு முன்னர் இந்தக் குழுவில் பரிசீலனை செய்யப்படலாம்.

இந்தக் குழுவுக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களைக் கொண்ட உத்தி யோகத்தர்கள் குழுவொன்று அமைச்சரவையினால் நியமிக்கப்படலாம்.

(II) அரசாங்க சேவை முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பிலான அமைச்சரவை குழு -

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினதும் ஏனைய உரிய ஆணைக்குழுவினதும் கீழ் எடுக்கப்படாத அரசாங்க சேவைக்குரிய ஏதேனும் விடயங்கள் தவிர அரசாங்க சேவைக்குரிய கொள்கை ரீதியிலான விடயங்கள், ஏதேனும் சட்டத்தின் மூலம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பிற உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்படாத விடயங்களுக்குரியதாக ஏதேனும் அமைச்சரவைப் பத்திரமொன்றில் உள்வாங்கப்பட்டுள்ள பிரேரிப்புகள் தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து அமைச்சரவைக்கு பொருத்தமான சிபாரிசுகளை சமர்ப்பிக்கும் பொருட்டு இந்தக் குழுவை நியமிக்கலாம்.

இந்தக் குழுவுக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களைக் கொண்ட உத்தி யோகத்தர்கள் குழுவொன்று அமைச்சரவையினால் நியமிக்கப்படலாம்.

(III) சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழு -

(அ) மேற்போந்த குழுவின் கடமை பொறுப்புகள் பின்வருமாறாகும் -

(i) புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துதல் அதேபோன்று நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு திருத்தங்களை அறிமுகப்படுத்துதல் தொடர்புபட்ட கருதுகோள் பத்திரம் / அடிப்படை வரைவுகள் அடங்கலாக சட்ட மற்றும் நியதிச்சட்ட ரீதியிலான பணிகளுக்குரிய ஏதேனும் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் அமைச்சரவைப்பத்திரமொன் றிலுள்ள பிரேரிப்புகளை ஆழமாக ஆராய்ந்து அங்கீகாரத் திற்காக அமைச்சரவைக்கு பொருத்தமான சிபாரிசுகளை சமர்ப்பிப்பதாகும்.

(ii) புதிய சட்டங்கள் அதேபோன்று நடைமுறையிலுள்ள சட்டங் களுக்கான திருத்தங்கள் என்பவற்றை முன்னுரிமைப்படுத்தி தாபன விதிக்கோவையின் XXXIII ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் இந்த கைநூலின் இரண்டாம் அத்தியாயத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறும் “அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித் திட்டத்தை” தயாரிப் பதற்குத் தேவையான நடவடிக்கை யினை எடுத்து ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியன்றுக்கு முன்னர் பரிசீலனை செய்வதற்கும் அங்கீகாரத்தின் பொருட்டும் குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல்.

(ஆ) சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழுவினால் அதன் பணிகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றும் போது அதற்கு ஒத்தாசை நல்குவதற்கு பின்வரும் கட்டமைப்புடன்கூடிய நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்படலாம்.

* உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் - (தலைவர்)
* சட்ட ஆணைக்குழுவின் தலைவர்
* மன்றாடியார் அதிபதி
* சட்டவரைநர்
* அமைச்சரவையினால் நியமிக்கப்படும் சட்டவாக்க ஒருங்கிணைப்பாளர்
* நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் மேலதிக செயலாளர் - (கூட்ட அழைப்பாளராக / செயலாளராக செயலாற்றும் பொருட்டு)

நிபுணர்கள் குழுவானது பின்வருமாறு செயலாற்றுதல் வேண்டும் -

* அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிக்கும் போதும் பரிசீலனை செய்யும் போதும் சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவைக் குழுவுக்கு ஒத்தாசை நல்குதல்.

* இந்த கைநூலின் இரண்டாம் அத்தியாயத்தின் 2.16 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைச்சுக்களினால் தயாரிக்கப்படும் கருதுகோள்பத்திரம் / ஆரம்ப வரைவு என்பவற்றுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான சிபாரிசுகளைச் செய்தல்.

* அமைச்சரவை குழுவினால் நிபுணர்கள் குழுவுக்கு கையளிக்கப்படும் சட்டவாக்கத்திற்குரியதான வேறு பணிகளை நிறைவேற்றுதல்.

அத்துடன் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்போந்த நோக்கங்கள் கருதி எந்தவொரு துறைசார் நிபுணர்களினது ஒத்தாசையினைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை குழுவுக்கு இயலுமாகும்.

### அமைச்சரவை உபகுழுக்கள், அமைச்சர் குழுக்கள் மற்றும் உத்தியோகத்தர் குழுக்கள்

1.18 அமைச்சரவையினால் விசேட விடயங்களென தீர்மானிக்கப்படும் விடயங்கள் சம்பந்தமாக மேலும் ஆராய்ந்து திட்டவட்டமான காலப்பகுதிக்குள் அங்கீகாரத்தின் பொருட்டு அமைச்சரவைக்குச் சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்கு ஒரு சில அமைச் சரவை உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை உபகுழுக்களை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நியமிக்கலாம். அமைச்சரவை உபகுழுக்களுக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு உத்தியோகத்தர்களை அல்லது உத்தியோகத்தர்கள் குழுவொன்று நியமிக்கப் படலாம். அமைச்சரவை உபகுழுக்களினால் செய்யப்படும் சிபாரிசுகள் உடனடியாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு அமைச்சரவையினால் முன் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் தவிர, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் மாத்திரம் அமைச்சரவை உபகுழு சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துதல்

வேண்டும். கையளிக்கப்பட்டுள்ள பணிகள் நிறைவடைந்ததும் உரிய அமைச்சரவை உபகுழு அதன் பணிகளை முடிவுறுத்துதல் வேண்டும். அமைச்சரவை உபகுழுக்களுக்கு மேலதிகமாக தேவையான சந்தர்ப்பங்களில் திட்டவட்டமான விடயமொன்று சம்பந்தமாக சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்கு அமைச்சர்கள் குழுக்களை நியமிப்பதற்கும் அமைச்சரவைக்கு இயலும். அமைச்சரவை குழுக்கள் அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். தேவையாயின் இவ்வாறு நியமிக்கப்படும் அமைச்சர்கள் குழுவுக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு உத்தியோகத்தர்கள் குழுவொன்றை நியமிக்கக்கூடிய சாத்தியமும் நிலவுகின்றது. கையளிக்கப்படும் பணிகள் சம்பந்தமாக அதன் சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர், அதன் பணிகளை முடிவுறுத்துதல் வேண்டும்.

அதேபோன்று ஏதேனும் அமைச்சரவைப்பத்திரமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரிப்பு அல்லது சிபாரிசு தொடர்பில் மேலும் விடயங்களை ஆராய்ந்து உரிய அமைச்சரின் ஊடாக அமைச்சரவைக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பிக்கும் பொருட்டு உத்தியோகத்தர் குழுக்களை நியமிப்பதற்கும் அமைச்சரவைக்கு இயலுமாகும்.

## அமைச்சரவைக்கு அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல்

1.19 அமைச்சரவை அமைச்சர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றும் போது தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்து அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்தல் வேண்டும். ஆதலால், அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அல்லது வேறு எழுத்துமூல சட்டமொன்றின் கீழ் அல்லது நிர்வாக ஒழுங்குவிதிகளின் மூலம் அத்தகைய ஏதேனும் அதிகாரபீடத்திற்கு / நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் தவிர தமது அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளுக்குரியதான நடவடிக்கைகள் சம்பந்தமாக தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவது அமைச்சுக்களின் செயலாளர்களின் பொறுப்பாகும்.

1.20 “அமைச்சரவைப்பத்திரம்” என்னும் போது அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அமைச்சரவை குறிப்புகள் அல்லது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் அத்தகைய ஏதேனும் எழுத்து மூலமான ஆவணங்களைக் குறிக்கும். ஏதேனும் விடயமொன்று சம்பந்தமாக அமைச்சரவையின் திட்டவட்டமான அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுமாயின் அதன் பொருட்டு பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள் உள்ளடக்கப்பட்ட “அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றினை” சமர்ப்பித்தல் வேண்டும். ஆயினும், ஏதேனும் விடயமொன்று சம்பந்தமாக திட்டவட்டமான அங்கீகாரத்தினை எதிர்பார்க்காது அமைச்சரவைக்கு அறியச் செய்விப்பதற்காக மாத்திரம் விடயங்களை முன்வைக்கும் போது அதனை “அமைச்சரவை குறிப்பொன்றின்” மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதேபோன்று விசேட அங்கீகாரத்தினை எதிர்பார்க்காது முன்னர் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானமொன்று சம்பந்தமாக மேலதிக தகவல்கள் / முன்னேற்றம் பற்றி அமைச்சரவைக்கு அறிவிக்கும் போதும் அமைச்சரவைக் குறிப்பொன்றினைச் சமர்ப்பித்தல் போதுமானதாகும்.

1.21 அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் அல்லது அமைச்சரவைக் குறிப்பொன்றின் மூலம் அமைச்சரவைக்கு விடயங்களை முன்வைக்க முடியுமாவது சனாதிபதி, பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்கு மாத்திரமேயாகும். இதனைவிட தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவை யினால் பரிசீலனை செய்வதற்காக விசேட விடயங்களை அமைச்சரவைக் குறிப்பின் மூலம் முன்வைப்பதற்கு அமைச்சரவைச் செயலாளருக்கு இயலுமாகும்.

1.22 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரின் ஆலோசனையின்படியும் உரிய சந்தர்ப்பங்களிலும் தமது அமைச்சின் கீழுள்ள அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுடன் ஒருங்கிணைந்து உரிய அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரிக்கும் பொறுப்பானது உரிய அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சின் செயலாளருடையதாகும். அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள் சம்பந்தமான பொறுப்பு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கு கையளிக்கப்படுவதோடு, அமைச்சரவைப்பத்திரத்திலுள்ள விடயங்களின் செம்மைத்தன்மை தொடர்பிலான பொறுப்பு உரிய அமைச்சின் செயலாளருடையதாகும்.

1.23 அமைச்சரவைப்பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவைப் பத்திரங்களின் சமர்ப்பணம் என்பவற்றின் போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் இவ்வழிகாட்டு நெறிகளுக்கு அமைவாகச் செயற்பட வேண்டும். அமைச்சரவைச் செயலாளரினால் அமைச்சரவையின் பணிப்பின் பேரில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பணம் சம்பந்தமான வழிகாட்டல்கள் காலத்திற்கு காலம் திருத்தி வெளியிடப்படும்.

## அமைச்சரவைப்பத்திரங்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பிலான வழிகாட்டுதல்கள்

1.24 **அமைச்சரவையின் அங்கீகாரம் நாடப்பட வேண்டிய விடயங்கள்:**

(i) அமைச்சரவையின் அங்கீகாரம் நாட வேண்டுமென அரசியலமைப்பில் அல்லது வேறு எழுத்துமூல சட்டத்தினால் வேண்டப்பட்டுள்ள விடயங்கள் யாவும்.

(ii) ஏற்கனவே அங்கீகாரம் கிடைக்கப்பெறாத தேசிய கொள்கை வகுத்தலுக் குரியதான பின்வரும் விடயங்கள்:

(அ) அமைச்சுக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளுக்குரியதாக புதிய தேசிய கொள்கைகளை வகுத்தல் அல்லது நடைமுறையிலுள்ள தேசிய கொள்கைகளைத் திருத்துதல்.

* தேசிய கொள்கைகளை வகுக்கும் போது உரிய விடயம் தொடர்பிலான நிபுணர்களினதும் சகல தரப்பினர்களினதும் பொது மக்களினதும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமானதாகும். அவ்வாறு பெற்றுக்கொள்ளப் படும் கருத்துக்கள் தொடர்பிலான தகவல்கள் உள்ளடக் கப்பட்ட பொழிப்பொன்று உரிய அமைச்சரவைப்பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும். கலந்துரையாடல்கள் மூலமோ எழுத்து மூலமோ கருத்துக்கோரும் டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலமோ அமைச்சினால் கருத்துக்ளை கோரலாம். உரிய ஏனைய தரப்பினர்களின் கருத்துக்களை கோரும் போது இந்தக் கைநூலில் 1.28 தொடக்கம் 1.33 வரையிலான பந்திகளில் விரிவாக குறிப்பிடப் பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுப்பது பொருத்தமானதாகும்.

* விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக் கோரல் செயற்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது பொருத்தமானதாகும்.

* அமைச்சொன்றினால் அதன் விடயநோக்கெல்லைக்குரிய விடயமொன்று சம்பந்தமாக தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட தேசிய கொள்கையின் இறுதி வரைவானது மீளாய்வு செய்யும் பொருட்டு முதலில் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

* அச்சந்தர்ப்பத்தில் உத்தேச தேசிய கொள்கையானது நாட்டின் பொருளாதாரம், நிதி மற்றும் அபிவிருத்தி முன்னுரிமைகள், தேசிய கொள்கை கட்டமைப்பு உட்பட சர்வதேச பொறுப்புகளுடன் ஒத்திசைகின்றனவா என்பது பற்றி தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மீளாய்வு செய்யப்படுவதோடு பரந்துபட்ட பேரினப்பொருளாதார மற்றும் சமூக நோக்கங்களுடன் இது ஒருங்கிணை கின்றமை பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளப்படும்.

* மேற்போந்த செயற்பாட்டினைப் பின்பற்றித் தயாரிக்கப்படும் தேசிய கொள்கைகளின் இறுதி வரைவுகள் உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதுதும் தேசிய கொள்கை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச் சரினதும் ஒப்பத்துடன் கூட்டு விஞ்ஞாபனமொன்றாக அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்படுவதற்கும் அங்கீகாரத்தின் பொருட்டும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தேசிய கொள்கையினுள் தயாரிக்கப்பட்ட துறைசார் கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் திட்டங்கள்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட தேசிய கொள்கைக்கு அமைவாக நடைமுறைப் படுத்தப்படவுள்ள தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்.

(iii) புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான பிரேரிப்புகள், நடைமுறையிலுள்ள சட்டமொன்றை திருத்துவதற்கான பிரேரிப்புகள் மற்றும் சட்டங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளவேண்டிய கீழ்நிலைச் சட்டங்களை தயாரித்தல் தொடர்பிலான பிரேரிப்புகள் -

(அ) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களுக்கு கையளிக்கப் பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளுக்குரியதாக ஏற்கனவே அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு அல்லது நடைமுறை யிலுள்ள சட்டங்களுக்குத் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு சட்டமூலங்களை வரைவதற்கு சட்டவரைநருக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) சட்டவரைநரினால் வரையப்படும் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் உடன்பாட்டினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் உரிய சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் அதன் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்.

(இ) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலமொன்று சார்பில் குழுநிலை சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அரசியலமைப்பின் 78(3) ஆம் உறுப்புரைக்கு அமைவாக குறித்த சட்டமூலத்தின் உள்ளடக்கத்திற்கும் குறிக்கோள்களுக்கும் முரணாகாத விதத்திலான அத்தகைய திருத்தங்கள் (சட்டமா அதிபரின் உடன்பாட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும்).

(ஈ) பல்வேறுபட்ட சட்டங்களின் கீழ் அமைச்சர்களுக்கு கையளிக்கப் பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் தயாரிக்கப்படும் கட்டளைகள் / பிரகடனங்கள் / விதிகள் / துணைச் சட்டங்கள் / ஒழுங்குவிதிகள் போன்ற கீழ்நிலைச் சட்டங்கள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

(உ) அத்தகைய ஏதேனும் கட்டளைகள் / பிரகடனங்கள் / விதிகள் / துணைச் சட்டங்கள் / ஒழுங்குவிதிகள் போன்ற கீழ்நிலைச் சட்டங்கள் அமைச்சரினால் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு முன்னர் பாராளுமன்ற அங்கீகாரம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்னும் ஏற்பாடுகள் உரிய சட்டத்தில் உள்வாங்கப்பட்டிருப்பின் அமைச்சரவையின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொண்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும்.

(ஊ) மேல் (ஈ) யில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் / பிரகடனங்கள் / விதிகள் / துணைச் சட்டங்கள் / ஒழுங்குவிதிகள் போன்ற கீழ்நிலைச் சட்டங்கள் மூலம் பொது மக்களுக்கு அல்லது குறியிலக்காகக் கொள்ளப்பட்ட தரப்பினர்களுக்கு கணிசமான பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதென அல்லது கருத்து முரண்பாட்டிற்கு இடமுள்ளதென தெரிய வருமாயின் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு முன்னர் அத்தகைய கீழ்நிலைச் சட்டங்கள்.

(iv) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் / சர்வதேச அமைப்புகளுடன் / வெளிநாட்டு நிறுவனங்களுடன் உடன் படிக்கைகளில் / புரிந்துணர்வு உடன்படிக்கைளில் / பிற ஆவணங்களில் கைச்சாத்திடுதல்.

அத்தகைய உடன்படிக்கைகளை / புரிந்துணர்வு உடன்படிக்கைகளை / ஆவணங்களை கைச்சாத்திடுவதற்கு அங்கீகாரத்தினை எதிர்பார்க்கும் போது பின்வரும் தகவல்கள் உரிய அமைச்சரவைப்பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும் என்பதோடு, தேவையானவாறு உரிய ஆவணங்களின் பிரதிகள் அமைச்சரவைப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

* உத்தேச உடன்படிக்கையில் / புரிந்துணர்வு உடன்படிக்கையில் / ஆவணங்களில் கைச்சாத்திடுவதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கக்கூடிய நலன்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் வகிக்கவேண்டிய பொறுப்புகள் என்பன தொடர்பிலான தகவல்கள்.

* குறித்த உடன்படிக்கையில் / ஆவணத்தில் கைச்சாத்திடுவதன் காரணமாக இலங்கை அரசாங்கம் நிதி ரீதியிலான பொறுப்புகள் எதற்கும் ஆட்படுமாயின் அது தொடர்பிலான தகவல்கள்.

* இரு நாடுகளுக்கிடையில் உத்தியோகபூர்வமாக உடன்பாடு காணப்பட்டுள்ள வரைவு உடன்படிக்கையின் / ஆவணத்தின் பிரதி.

* குறித்த வரைவு உடன்படிக்கை / ஆவணம் சார்பில் வெளிநாட்ட லுவல்கள் என்னும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் உடன்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதா என்பது பற்றியும் குறித்த கடிதத்தின் பிரதியும்.

* சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள 2023-01-09 ஆம் திகதியிடப்பட்டதும் PS/EAD/Circular/16/2022 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான சுற்றறிக்கையின் பிரகாரம் சட்டமா அதிபரின் உடன்பாடு பெற்றிருப்பின் அதன் பிரதியும்.

கைச்சாத்திடப்படும் ஆவணமானது ஒப்பந்தமொன்று அல்லது அரசாங்கத்திற்கு நிதி ரீதியில் அல்லது ஏதேனும் சட்டப் பொறுப்புகளை ஏற்படுத்தும் விதத்திலான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக சட்டமா அதிபரின் உடன்பாட்டினைப் பெற்று, அதன் பிரதியானது இணைக்கப்பட்டிருப்பது அத்தியாவசியமானதாகும்.

(v) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையில் திட்டவட்டமாக குறித்துரைக்கப்பட்டுள்ள அமைச்சுக்களின் கொள்வனவுக் குழுக்களினது பெறுமதி எல்லைகளை விஞ்சுகின்ற பெறுகைகள் சம்பந்தமாக செயலாற்றும் பொருட்டு அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் கொள்வனவுக் குழுக்கள் அனைத்தையும் நியமித்தல் மற்றும் இவ்வாறு நியமிக்கப்படும் கொள்வனவுக் குழுக்களின் சிபாரிசுகளின் பிரகாரம் உரிய கொள்வனவுகளை வழங்குதல்.

அமைச்சரவையின் விடயநோக்கெல்லைக்குள் வரும் பெறுகைகள் சார்பில் அங்கீகாரங்களை எதிர்பார்க்கும் போது உரிய அமைச்சரவைப் பத்திரத்துடன் பின்வரும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

* அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட கொள்வனவு குழுவின் இறுதி சிபாரிசுகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பிரதி.

* கொள்வனவுக் குழுவின் தீர்மானம் சகல வெற்றி பெறாத கேள்விதாரர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதெனவும், கொள்வனவு மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடுகள் சமர்ப்பிப்பதற்கு விதித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதெனவும்/ கிடைக்கவில்லையெனவும்.

* மேன்முறையீடுகள் கிடைத்திருப்பின் அது தொடர்பில் கொள்வனவு மேன்முறையீட்டுச் சபையின் சிபாரிசுகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பிரதி.

* கொள்வனவு மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பிலான கொள்வனவு மேன்முறையீட்டுச் சபையின் சிபாரிசுகளுடன் உரிய அமைச்சின் செயலாளர் உடன்படவில்லையாயின் அதுபற்றி அமைச்சின் செயலாளரின் கருத்துக்கள் மற்றும் சிபாரிசுகள்.

* அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசுடமை கம்பனிகளுக்குரிய கொள்வனவு சம்பந்தமாக அமைச்சரவையின் அங்கீகாரம் நாடப்படும் போது உரிய கேள்வி செயற்பாட்டினை ஆரம்பிக்கும் பொருட்டு குறித்த நிறுவனங்களின் பணிப்பாளர் சபையின் / ஆளுநர் சபையின் உடன்பாடு வழங்கப் பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென் பதோடு, அதுபற்றி அமைச்சரவைப்பத்திரத்தில் குறிப்பிடுதலும் வேண்டும்.

* அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்பட்ட நிலையியல் கொள்வனவு குழுக்களின் சிபாரிசுகளின் பிரகாரம் அமைச்சரவை யின் தழுவு அங்கீகாரத்திற்கு உட்பட்டு, கொள்வனவுகளை வழங்குவதற்கு அமைச்சரவையின் முன் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அவ்வாறு வழங்கப்பட்ட கொள்வனவு தொடர்புபட்ட தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றை மாதாந்தம் அமைச்சரவையின் தழுவு அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) தேசிய நலனின் பொருட்டு விதிவிலக்கான நிலைமைகளில் தாபன விதிக் கோவை / நிதி ஒழுங்குவிதிகள் / தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள் / அரசாங்க - தனியார் கூட்டுத் தொழில்முயற்சி கருத்திட்டங்களின் கொள்வனவு தொடர்பில் நடைமுறையிலுள்ள வழிகாட்டல் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலகி நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரத்தைக் கோருதல்.

(vii) வருடாந்த வரவுசெலவுத்திட்டத்திலிருந்து குறித்தொதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை மாற்றுவதன் மூலம் செலவினத்தை எதிர்நோக்க முடியாத நிலையில் உள்ள அல்லது அடுத்த வரவுசெலவுத்திட்டம் வரை பிற்போட முடியாத நிலையில் உள்ள அவசர அரச விடயங்களுக்காக பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்.

(viii) வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணக் கணக்கு எல்லைகளைத் திருத்துதல்.

(ix) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அல்லது வேறு உரிய அதிகாரபீடங்களின் விடய நோக்கெல்லைக்குள் வரும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது உத்தியோகத்தர்கள் குழு சம்பந்தமான விடயங்கள் தவிர, அரசியலமைப்பின் 55(1) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான கொள்கை விடயங்கள்.

(x) அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் சகல திணைக்களத் தலைவர்களினதும் (மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள் அடங்கலாக) நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான விடயங்கள்.

(xi) ஏதேனும் எழுத்து மூலமான சட்டமொன்றின் கீழ் அமைச்சரவை "நியமன அதிகாரியாக" உள்ள சந்தர்ப்பங்களில் உரிய நியமனங்களை மேற்கொள்தல்.

(xii) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் அரசுடமை கம்பனிகளினதும் நியதிச் சட்டசபைகளினதும் ஆண்டறிக்கைகளையும் கணக்குக் கூற்றுக்களையும் / நிதிக் கூற்றுக்களையும் அல்லது வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலங்க அரசாங்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் XII ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயங்சிகளினால் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசுடமை கம்பனிகள் மற்றும் நியதிச் சட்டசபைகள்) ஆண்டறிக்கைகளை, கணக்கு கூற்றுக்களை / நிதிக் கூற்றுக்களை அல்லது வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை எதிர்பார்க்கும் சந்தர்ப்பங்களில் குறித்த அறிக்கைகளாவன நிதி என்னும் விடயத்திற்குப்

பொறுப்பான அமைச்சினால் அரசாங்க தொழில்முயற்சிகளுக்கான தாபன மற்றும் நிர்வாகம் பற்றிய வழிகாட்டுதல்களின் தேவைகளுக்கமைவாக தயாரித்து, அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க தொழில்முயற்சிகளுக்கான செயலாற்றுகை கைநூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு விதித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலுமாகும் வகையில் பின்வரும் தகவல்களுடன் அமைச்சரவையினால் பரிசீலனை செய்யும் பொருட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(அ) நிறுவனத்தின் உரிய காலப்பகுதிக்கான செயலாற்றுகை பற்றிய சுருக்க அறிக்கை.

(ஆ) எதிர்காலத்தில் நிறுவனத்தின் செயலாற்றுகையை விருத்தி செய்துகொள்வதற்கு பின்பற்றப்படவுள்ள குறுகிய கால மற்றும் நடுத்தவணைகால நடவடிக்கைகள்.

(இ) ஆண்டறிக்கைக்கு உரியதான காலப்பகுதியின் சார்பில் சமர்ப்பிக் கப்பட்டுள்ள கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்கு உரிய நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தினால் மற்றும் அதன் பணிப்பாளர் சபையினால் / ஆளுநர் சபையினால் எடுக்கப்பட்டுள்ள அத்துடன் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள்.

(ஈ) அமைச்சரவையின் கவனத்திற்கு தொடர்புபடுத்த வேண்டிய நிறுவனத்திற்குரிய பிற முக்கிய விடயங்கள்.

(xiii) நீதிமன்ற நடவடிக்கையொன்று சம்பந்தமாக அத்தகைய ஏதேனும் நீதிமன்றமொன்றின் அல்லது நியாயசபையொன்றின் முன் அரசு தரப்பொன்றாக உள்ள சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் தீர்வொன்றுக்கு / உடன்பாடொன்றுக்கு வருவது தொடர்பிலான பிரேரிப்புகள்.

(xiv) அரசு தரப்பொன்றாகவுள்ள நீதிமன்ற கட்டளையொன்று சம்பந்தமாக மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கான பிரேரிப்புகள்.

(xv) அரசாங்க நிதி நடவடிக்கைகள் அல்லது பிற நடவடிக்கைகள் சம்பந்தமாக கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தி நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்கு எதிராக ஏதேனும் அமைச்சொன்று அல்லது திணைக்களமொன்று மேன்முறையீடு செய்வதற்கு எதிர்பார்க்காத சந்தர்ப்பத்தில் அது தொடர்பிலான தகவல்கள் சம்பந்தமாக அமைச்சரவைக்கு அறிவித்தல்.

(xvi) அரசாங்க நிறுவனங்களுக்கு இடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்கும் பொருட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் செல்லாது தீர்வொன்று காணுதல் / உடன்பாடு காணுதல் தொடர்பில் உச்ச முயற்சிகளை எடுக்க வேண்டுமென்பதோடு, இவ்வாறு தீர்வொன்றுக்கு / உடன்பாடொன்றுக்கு வருவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் தேவையென இனங்காணப்படும் பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள்.

(xvii) முன்னர் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தினை நடைமுறைப் படுத்துவது கடினமாக அமையுமாயின் அது பற்றி அமைச்சரவைக்கு அறிவிப்பதற்கான அல்லது அமைச்சரவைத் தீர்மானத்தை திருத்து வதற்கான பிரேரிப்புகள்.

இத்தகைய பிரேரிப்புகளை கூடிய விரைவில் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு அமைச்சுக்களின் செயலாளர்களினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(xviii) அமைச்சரவையினால் பல்வேறுபட்ட விடயங்களை ஆராய்ந்து சிபாரிசு களை சமர்ப்பிக்கும் பொருட்டு நியமிக்கப்படும் அமைச்சரவை உபகுழுக் களின், அமைச்சர்கள் / உத்தியோகத்தர்கள் குழுக்களின் சிபாரிசுகள்.

(xix) கணிசமான அளவு பொதுமக்களின் கருத்துக்களுக்கு அல்லது விமர்சனங்களுக்கு ஏதுவாக அமையக்கூடிய விடயங்கள்.

1.25 அங்கீகாரத்தினை எதிர்பார்த்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படலாகாத விடயங்கள்:

(i) அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அல்லது எழுத்துமூல சட்டங்கள் அல்லது நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதி, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வழிகாட்டல்கள், கொள்வனவு வழிகாட்டல்கள் முதலியன அடங்கலாக வேறு ஏதேனும் இடைநேர் விளைவான சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிற அதிகாரபீடங்களுக்கு கையளிக் கப்பட்டுள்ள விடயங்களுக் குரியதான பிரேரிப்புகள். (அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் ஒன்பதாம் அட்டவணையில் பட்டியல் I இல் உள்ள மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்களையும் உள்ளடக்கி)

(ii) அமைச்சரவையினால் பிற அதிகாரபீடங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள நோக்கங்கள் தொடர்புபட்ட விடயங்கள்.

(iii) நீதிமன்றமொன்றின் முன் முடிவுறாமல் எதிர்பார்த்த நிலையில் சட்ட நடவடிக்கையொன்று உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த சட்ட நடவடிக்கையில் ஒரு தரப்பாக அரசாங்கம் பெயரிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்த விடயம் நேரடியாக தொடர்புள்ள பிரேரிப்புகள். (எனினும், சட்ட விடயமொன்று தொடர்பில் தீர்த்துக்கொள்வதற்கு இயைபுள்ள தரப்புகளுடன் தீர்வுகளுக்கு / உடன்பாட்டுக்கு வருவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவையானது)

(iv) நீதிமன்றக் கட்டளையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச் சரவையின் அங்கீகாரம் தேவையற்ற போதிலும் அத்தகைய கட்டளை யொன்று தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிப்பது அவசியமானதாகும்.

(v) தேசிய நலனின் பொருட்டு அத்தியாவசியமானவையாக இருந்தாலொழிய, அரசாங்க தொழில் முயற்சிகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் பணிப்பாளர்கள் சபையினால் இயைபுள்ள நிறுவனங்களின் வர்த்தக ரீதியான ஒப்பேறு வாய்ப்பு நிலையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு இசைவற்ற தீர்மானங்கள்.

(vi) அமைச்சொன்றுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் நோக்கங்களை நாளாந்தம் முகாமித்தல் சம்பந்தமான விடயங்கள்.

(vii) பல்வேறுபட்ட சட்டங்களின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங் களுக்கமைவாக நியதிச்சட்ட ரீதியிலான தீர்மானங்களை (நடைமுறை யிலுள்ள கொள்கையினுள்) எடுத்தல் அல்லது நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான பிரேரிப்புகள்.

1.26 அமைச்சரவைப்பத்திரங்களைத் தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்படவேண்டிய முக்கிய விடயங்கள்:

(i) அமைச்சரவை விஞ்ஞாபனத்திலுள்ள பிரேரிப்புகள் / சிபாரிசுகள் வேறு அமைச்சொன்றுக்கு / அமைச்சுகளுக்கு உரியதான விடயங்களுக்கு அல்லது குறித்த அமைச்சுக்கு / அமைச்சுகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு தாக்கத்தினை ஏற்படுத்துமென தெரியவருமாயின் குறித்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படும் விடயங்கள் மற்றும் பிரேரிப்புகள் சம்பந்தமாக முதலில் உரிய அமைச்சுடன் / அமைச்சுக்களுடன் கலந்துரையாடுதல் வேண்டும்.

(ii) மேல் (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கலந்துரையாடலின் போது உடன்பாடு காணப்படும் விடயங்களின் அடிப்படையில் உரிய பிரேரிப்புகளானவை கூட்டு விஞ்ஞாபனமொன்றாக உரிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் ஒப்பத்துடன் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் மிகவும் பொருத்தமானதாகும்.

(iii) அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகாரம் கையளிக் கப்பட்டுள்ள மாகாண சபைகள், அரசாங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்ற தாபனங்களின் விடய நோக்கெல்லைக் குரிய விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படலாகாது என்பதோடு, அமைச்சரவையின் அங்கீகாரம் அத்தியாவசியமானதென அத்தகைய தாபனங்கள் கருதுமாயின் மாத்திரம் உரிய விடயங்களைப் பரிசீலனை செய்யும் பொருட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) நிதியளித்தல் அல்லது கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு நிதியளிப்புக்கு உரியதாக வெளிநாட்டு நிதியங்களை வழங்கும் நிறுவனங் களுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளை திருத்துவதற்கு அல்லது குறித்த உடன்படிக்கைகளின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் போது முதலில் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக் களத்தினதும் நிதியளிக்கும் உரிய நிறுவனத்தினதும் உடன்பாட்டினை / ஆலோசனையினை பெற்றிருக்க வேண்டுமென்பதோடு, பிரேரிக்கப் பட்டுள்ளவாறு உடன்படிக்கைகளை திருத்துவதன் மூலம் அல்லது குறித்த உடன்படிக்கைகளின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதன் மூலம் ஏற்படும் நிதி சார் மற்றும் பிற தாக்கங்கள் பற்றிய கூற்றொன்று விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) சகல அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் மும்மொழிகளில் சமர்ப்பிக் கப்படல் வேண்டும். எனினும் சில சந்தர்ப்பங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுடன் சமர்ப்பிக்கப்படும் இணைப்புகளை மும்மொழி களிலும் தயாரித்து தாமதமின்றி சமர்ப்பிக்கும் சிரமத்தினைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு, இது தொடர்பில் பின்வருமாறு நடவடிக்கை எடுப்பது பொருத்தமானதாகும்:

(அ) பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக விஞ்ஞாபனங்களை சமர்ப்பிக்கும் போது உரிய இணைப்புகள் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் -

* பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக சட்ட வரைநரினால் தயாரிக்கப்பட்ட சட்டமூலங்கள்.

* குறித்த சட்டமொன்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்து பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும் கட்டளைகள் / பிரகடனங்கள் / விதிகள் / துணைச் சட்டங்கள் / ஒழுங்குவிதிகள் போன்ற கீழ்நிலைச் சட்டங்கள்.

* அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் பொது மக்களின் தகவலுக்காக வெளியிடப்படவுள்ள ஆவணமொன்று.

* குறிப்பிட்ட துறையொன்றுக்காகத் தயாரிக்கப்பட்ட கொள்கை ஆவணங்கள் போன்ற பல்வேறு மட்டங்களிலும் உத்தியோகத்தர்களினால் பயன்படுத்தப்படும் ஆவணங்கள்.

* அமைச்சரவையின் அங்கீகாரத்தை நாடி சமர்ப்பிக்கப்படும் வரைவுச் சுற்றறிக்கைகள்.

* அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ள உடன்படிக்கைகள்.

* இந்த கைநூலில் 1.24 ஆம் பந்தியில் (xii) என்பதன் கீழ் (அ) தொடக்கம் (ஈ) வரை குறிப்பிடப்பட்டுள்ள சகல ஆவணங்களும்.

(ஆ) ஒருசிலரினால் மாத்திரம் உபயோகப்படுத்தக்கூடிய தொழிநுட்ப விடயங்களை உள்ளடக்கிய அறிக்கைகள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்படும்போது அதன் பதங்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை / மாற்றம் காணப்படுமிடத்து அதன் மூலம் குழப்ப நிலையை உருவாக்கக்கூடிய ஆவணங்கள் மற்றும் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படத்தக்க கொள்வனவுக் குழுக்களின் அறிக்கைகள் போன்ற ஆவணங்களை ஒரு மொழியில் மாத்திரம் தயாரித்து அவற்றிலுள்ள முக்கிய விடயங்கள் தொடர்பில் பொழிப்பு / சுருக்க விபரம் அமைச்சரவைப்பத்திரத்தில் உள்வாங்குதல் மிகப் பொருத்தமானதாகும்.

(இ) சட்டமூலங்களைத் தயாரிக்கும் போது சட்டவரைநருக்கு வழிகாட்டுதல்களாகத் தயாரித்து அனுப்பப்படும் கருதுகோள் பத்திரம் / ஆரம்ப வரைவு மொழியொன்றில் மாத்திரம் சமர்ப்பித்து அவற்றின் உள்ளடக்கத்தில் உள்ள முக்கிய விடயங்கள் குறிப்பிடும் பொழிப்பினை மும்மொழிகளிலும் தயாரிக்கப்படும் அமைச்சரவைப் பத்திரத்தில் உள்வாங்குதல் அல்லது புறம்பான இணைப்பொன்றாக சமர்ப்பித்தல் பொருத்தமானதாகும்.

(ஈ) அமைச்சரவைக்கு பல்வேறுப்பட்ட குழுக்களின் அறிக்கைகளை சமர்ப்பிக்கும் போது குறித்த குழுவினால் அறிக்கைகள் தயாரிக் கப்பட்ட மொழியிலேயே சமர்ப்பிப்பது போதுமானதாகும் என்பதோடு, உரிய அறிக்கையின் சுருக்கத்தினை அமைச்சரவைப் பத்திரத்தில் சேர்த்தல் வேண்டும்.

(vi) முன்னர் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஏதேனும் விடயமொன்று சம்பந்தமான அறிக்கையொன்றினை சமர்ப்பிக்கும் போது குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தின் குறிப்பிலக்கம், திகதி மற்றும் இந்த தீர்மானம் தொடர்பிலான சுருக்கமான உரிய அறிக்கை என்பவற்றுடன் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவைப்பத்திரத்தில் உள்வாங்குவதன் மூலம் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை இலகுவாக அமைச்சரவைக்கு அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

**1.27 அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றில் / அமைச்சரவைக் குறிப்பொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களும் சமர்ப்பிக்கும் முறையும்:**

அமைச்சரவைக்கு அறியச் செய்விக்கும் விடயங்களை முன்வைப்பதற்காக மாத்திரம் அமைச்சரவைக் குறிப்பு சமர்ப்பிக்கப்படும் என்பதனால் அவை சுருக்கமாக சமர்ப்பிக்கப்படுவது மிகப் பொருத்தமானதாகும். குறித்த விடயம் முன்னைய அமைச்சரவைத் தீர்மானமொன்று தொடர்புடையதெனின் குறித்த தீர்மானம் பற்றி சுருக்கமாக குறிப்பிட்டு, உரிய தகவல்கள் அமைச்சரவைக் குறிப்பில் சேர்ப்பது போதுமானதாகும்.

ஆயினும், அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் மூலம் அதன்கண்ணுள்ள பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள் தொடர்பில் திட்டவட்டமான அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுவதனால் உரிய சகல விடயங்களையும் இலகுவாக அறிந்து கொண்டு, இது தொடர்பிலான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானத் தினை எடுப்பதற்கு அமைச்சரவைக்கு இயலுமாகும் வகையில் அத்தியாவசிய தகவல்கள் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சார்பில் உரிய கட்டமைப்பொன்று இல்லாததோடு, அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் விடயங்களுக்கு அமைவாக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் கட்டமைப்பானது மாறுபடலாம். ஆயினும் ஏதேனும் விடயமொன்று சம்பந்தமாக அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் போது முக்கியமாக அமைச்சரவையின் கவனம் செலுத்தப்படவேண்டிய தகவல்களை பின்வரும் விதத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை இலகுவாக தெளிவு பெறுவதற்கும் அதேபோன்று அதிலுள்ள பிரேரிப்புகள் / சிபாரிசுகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பது அமைச்சரவைக்கு இலகுவானதாக அமையும்.

(அ) தலையங்கம்

அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் நோக்கம் தெளிவாகும் விதத்தில் தலையங்கமானது எளிதாகவும் மிக சுருக்கமாகவும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஆ) பின்னணி

இதன் கீழ் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்படுவதற்கான நோக்கம் தொடர்பில் சுருக்கமாக குறிப்பிடப்படுதல் வேண்டுமென்பதோடு, அமைச்சரவையினால் இதற்கு முன்னர் குறித்த விடயம் தொடர்பில் ஏதேனும் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தால் அது தொடர்பிலான தகவல்கள், அதாவது உரிய அமைச்சரவைத் தீர்மானத்தின் குறிப்பிலக்கம் மற்றும் அமைச்சரவையினால் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்ட திகதி என்பவற்றைக் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும்.

(இ) விபரம் மற்றும் நியாயப்படுத்துகை

அமைச்சரவையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள் தொடர்பிலான விபரங்கள் மற்றும் குறித்த பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள் தொடர்பிலான நியாயப்படுத்துகைகள் இதன்கீழ் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அதேபோன்று உரிய பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள் தொடர்பில் சட்ட ரீதியான விடயங்கள் உரியதாயின் அது தொடர்பிலான தகவல்கள், பிரேரிப்புகளை அல்லது சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கான செலவு, இதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படும் விதம், உரிய ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் கருத்து தெரிவிப்புகள் உட்பட உடன்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின் அத்தகைய தகவல்களும் இந்த பந்தியில் முன்வைப்பது மிகப் பொருத்தமானதாகும்.

(ஈ) பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள்

அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் ஊடாக அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள் தொடர்பில் பின்னணி, விபரம் மற்றும் நியாயப்படுத்துகை ஆகிய பந்திகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குரிய தீர்மானத்தினை வரையும் போது விஞ்ஞாபனத்திலுள்ள பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றமையினால் இந்த பந்தியின் கீழ் குறித்த பிரேரிப்புகள் அல்லது சிபாரிசுகள் மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப்பிடுதல் அத்தியாவசியமானதாகும்.

(உ) ஒப்பமும் திகதியும்

அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் இறுதியில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரினால் ஒப்பமிட்டு திகதியிடப்பட்டிருத்தல் வேண்டும். தொடர்புடைய விஞ்ஞாபனமானது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் இருவர் அல்லது அதற்கு மேல் கூட்டாக சமர்ப்பிக்கும் கூட்டு விஞ்ஞாபனமொன்றாயின் உரிய அமைச்சர்கள் அனைவரும் திகதியிட்டு ஒப்பமிடுதல் வேண்டும். (அமைச்சர்கள் இருவர் அல்லது அதற்கு மேலதிகமாக கைச்சாத்திடும் போது விஞ்ஞாபனத்தில் பல திகதிகளை குறிப்பிடாமல் இருப்பதை உறுதி செய்து கொள்வது ஏற்றதாகும்.) முதலாவதாக சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் தயாரிக்கப்படும் விஞ்ஞாபனம் மாத்திரம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரினால் / அமைச்சர்களினால் ஒப்பமிடுவது போதுமானதாகும். அத்துடன், மொழிபெயர்ப்பு பிரதிகள் "ஒப்பம்./" என குறிப்பிடப்பட்டு உரிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரின் / அமைச்சர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அமைச்சுக்களின் செயலாளர்கள் அமைச்சரவைப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

(i) அமைச்சரவைப்பத்திரம் தயாரிக்கப்படும் மொழி நடையானது எளிதாக அமைதல் வேண்டுமென்பதோடு, இலகுவாக புரிந்துகொள்ள முடியுமா தலும் வேண்டும்.

(ii) அமைச்சரவைப்பத்திரம் இரண்டு (02) பக்கங்களுக்கு வரையறுப்பது பொருத்தமானதாகும்.

(iii) பந்திகள் மற்றும் உபபந்திகள் முறையாகவும் செம்மையாகவும் இலக்கமிடப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு, பந்திகளைப் பிரித்தல் மற்றும் இலக்கமிடுதல் விஞ்ஞாபனத்தின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்படும் மூல அமைச்சரவைப் பத்திரத்திலும் அதேபோன்று மொழிபெயர்ப்பு பிரதிகளிலும் ஒரே விதத்தில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(iv) முதலில் அமைச்சரவைப்பத்திரம் தயாரிக்கப்படும் மொழியில் சொல்லப்படும் கருத்தானது மொழிபெயர்ப்பிலும் செம்மையாக உள்வாங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) தட்டெழுத்து குறைபாடுகள் மற்றும் மொழிபெயர்ப்பு குறைபாடுகள் என்பவற்றுடனான அமைச்சரவைப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படாமல் இருப்பதனை உறுதி செய்யவேண்டுமென்பதோடு, புள்ளிவிபர ரீதியிலான தகவல்களின் செம்மைத்தன்மை தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். மொழிபெயர்ப்பு பிரதிகளிலும் கூட குறித்த புள்ளிவிபர தகவல்கள் பிழையின்றி உள்வாங்கப்பட்டிருப்பதை உறுதி செய்துகொள்தல் வேண்டும்.

(vi) அமைச்சரவைப்பத்திரத்திலுள்ள விடயங்களுக்குரிய அத்தியாவசிய ஆவணங்களை மாத்திரம் இணைப்புகளாக அமைச்சரவைப் பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த இணைப்புகள் முறையாக இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அமைச்சரவைப் பத்திரத்தின் உரிய இடங்களிலும் இணைப்பின் குறிப்பிலக்கமானது சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். மொழிபெயர்க்கப்பட்ட பிரதிகளிலும் கூட இதற்கு சமமான விதத்தில் குறித்த இணைப்புகள் முறையாக இலக்கமிடப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்தல் வேண்டும்.

(vii) அமைச்சரவைப்பத்திரம் தயாரிக்கும் போது தலையங்கம் சார்பில் 10 என்னும் எழுத்து அளவினையும் (Font size) உள்ளடக்கம் சார்பில் 09 என்னும் எழுத்து அளவினையும் (Font size) பயன்படுத்துதல் வேண்டு மென்பதோடு, வரிகளுக்கிடையிலான இடைவெளியானது 1.2 (Line spacing) என்னும் அளவில் இருத்தல் வேண்டும். அமைச்சரவைப்பத்திரம் தயாரிக்கும் போது பின்வரும் Unicode Font எழுத்து வகையினை பயன்படுத்துதல் வேண்டும் -

* சிங்கள மொழி - "Iskoola Pota"
* தமிழ் மொழி - "Latha"
* ஆங்கில மொழி - "Times New Roman"

(viii) அமைச்சரவைப் பத்திரத்தின் பக்கங்கள் அனைத்தினதும் இடது பக்கம் மூன்று சென்றிமீற்றர் பகுதிகொண்ட இடைவெளி பேணப்பட வேண்டுமென்பதோடு, வலது பக்கம் இரண்டு சென்றிமீற்றர் இடைவெளி இருத்தல் வேண்டும்.

(ix) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சினால் கைச்சாத்திடப்பட்ட மூல அமைச்சரவைப்பத்திரத்தின் முதற் பக்கம் மற்றும் குறித்த பத்திரத்தின் ஏனைய மொழிபெயர்ப்புகளின் மூலப் பிரதிகளின் முதற் பக்கம் அமைச்சின் உத்தியோகபூர்வ தலைப்பு கடதாசியில் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(x) அச்சிடும் போது A4 (A4 size) அளவிலான கடதாசி மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டும். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரினால் ஒப்பமிடப்பட்ட அமைச்சரவைப்பத்திரம் மற்றும் அதன் மொழிபெயர்ப்பின் மூலப் பிரதி A4 கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் அச்சிடப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு, ஏனைய பிரதிகள் A4 கடதாசியின் இரு பக்கங்களிலும் அச்சிடப்படுதல் வேண்டும்.

(xi) பக்கங்களின் இறுதியில் செம்மையாக பக்க இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) அமைச்சரவைப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் போது பின்வரும் விடயங்களாவன அமைச்சுக்களின் செயலாளர்களினால் பிரத்தியேகமாக உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது -

(அ) இந்தக் கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவை விஞ்ஞாபனம் / அமைச்சரவைக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளதென உறுதிப் படுத்திக் கொள்தல்.

(ஆ) பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கீழ்நிலைச் சட்டங்களை அங்கீகாரத்தினை எதிர்பார்த்து அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றாக சமர்ப்பிக் கப்படும் போது தொடர்புடைய சட்டம் மற்றும் உத்தேச கீழ்நிலைச் சட்டம் என்பவற்றுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படாத விதத்தில் குறித்த கீழ்நிலைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்திக் கொள்தல்.

(இ) புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அல்லது நடைமுறையிலுள்ள சட்டமொன்றை திருத்துவதற்கு பிரேரிப் புகளை சமர்ப்பிக்கும் போது இத்தகைய பிரேரிப்புகளை துரிதமாக அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்ப்பதற்கு இயலுமாகும் வகையில் இதற்குரியதாக அமைச்சரவைச் செயலாளரின் கோரிக்கைக்குத் துரிதமாக பதிலளித்தல்.

(ஈ) புதிய தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்காக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அல்லது நடைமுறை யிலுள்ள சட்டமொன்றை திருத்துவதற்கு அங்கீகாரத்தை எதிர்பார்த்து அமைச்சரவைப்பத்திரமொன்றை சமர்ப்பிக்கும் போது இந்த கைநூலின் 1.28 தொடக்கம் 1.33 வரையிலான பந்திகளில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கோரும் அறிவுறுத் தல்களை முறையாக பின்பற்றியுள்ளமை பற்றியும் அது பற்றி அமைச்சரவைப்பத்திரத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளமை பற்றியும்.

(உ) மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்களின் மூல பிரதியுடன் மேலும் 20 பிரதிகள் அமைச் சரவை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அமைச்சரவைப்பத்திரங்கள் அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அரசுடமை கம்பனிகள் அல்லது நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் ஆண்டறிக்கைகள் அல்லது செயலாற்றுகை அறிக்கைகள் சம்பந்தமாகவெனில் மும்மொழிகளிலும் தயாரிக்கப் பட்ட ஆண்டறிக்கையின் / செயலாற்றுகை அறிக்கையின் 03 பிரதிகளும் குறித்த அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட இறுவெட்டும் (CD) சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்திக் கொள்தல்.

(ஊ) அமைச்சரவைப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படும் உள்ளடக்க விளக்கக் கடிதமானது அமைச்சின் செயலாளரினால் திகதியிடப் பட்டு அவரே ஒப்பமிட்டுள்ளாரென உறுதிப்படுத்திக் கொள்தல்.

அமைச்சின் செயலாளரினால் இவ்வாறு செய்யமுடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவரினால் அதிகாரம் கையளிக் கப்படும் குறித்த அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரினால் தொடர்புபட்ட உள்ளடக்க விளக்க கடிதத்தில் மேலொப்பம் இடப்படல் வேண்டும். அமைச்சரவைப் பத்திரத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக மேலதிக விடயங்களை தெளிவுபடுத்திக்கொள்ள தேவைப்படுமாயின் அது சம்பந்தமாக தொடர்புகொள்ள வேண்டிய உரிய சிரேட்ட உத்தியோகத்தரின் பெயர், பதவி மற்றும் தொலைபேசி இலக்கம் (செல்லிட தொலைபேசி இலக்கமும் உள்ளடங்கலாக) என்பன குறித்த உள்ளடக்க விளக்க கடிதத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(எ) அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவைப்பத்திரங்கள் யாவும் நிதி என்னும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினதும் ஏனைய உரிய அமைச்சர்களினதும் அவதானிப்புரைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் மாத்திரம் அமைச்சரவை கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்படும். ஆதலால் இதன் பொருட்டு இந்த கைநூலன் 1.37 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு போதுமான கால அவகாசத்துடன் அமைச்சரவை அலுவலகத்திற்கு அமைச்சரவைப்பத்திரங்களை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்திக் கொள்தல்.

(ஏ) அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்படுவதற்காக பிற்போடப்படும் அமைச்சரவைப்பத்திரங்கள் பற்றி அமைச்சரவை அலுவலகத்தினால் உரிய அமைச்சுக்களுக்கு அறிவிக்கப் படுவதோடு, இதற்கிணங்க இந்த அமைச்சரவைப்பத்திரங்களை மீண்டும் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படும் பிரதிகளின் எண்ணிக்கையினை துரிதமாக அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்திக் கொள்தல்.

(ஐ) அமைச்சரவைப்பத்திரங்கள் மற்றும் அவை தொடர்பிலான தீர்மானங்கள் "இரகசியத் தன்மைவாய்ந்த ஆவணங்களாக" கருதப்படுகின்றன. ஆதலால், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிந்துகொள்ளும் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் குறித்த ஆவணங்களை அல்லது அவற்றிலுள்ள தகவல்களை சம்பந்தமற்ற தரப்பினருக்கு கைமாறாமலிருப்பதற்கு சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் தமது அமைச்சினால் பின்பற்றப் படுகின்றதென உறுதிப்படுத்திக் கொள்தல்.

## கருத்துக்களைக் கோரும் தேவையும் முறையான நடைமுறையும்

1.28 கருத்துக்களைக் கோரல், அறிவுக்குட்பட்ட மற்றும் சரியான தீர்மானங்களை எடுக்கும் பணியினை இலகுபடுத்தும் சாட்சிகளின் மீது கொள்கைகளை ஆக்குதல் என்பது முக்கியமானதாகும். கருத்துக்களை முன்னரே கோருவதன் மூலம் தொடர்புடைய ஆக்கச் செயற்பாட்டிற்கு உரிய தரப்பினர்களினதும் கொள்கையினை நடைமுறைப்படுத்துபவர்களினதும் கருத்துக்களை பெற்றுக் கொள்ளலாம் என்பதோடு, இதன் மூலம் பங்களிப்பு சனநாயகத்தைப் பலப்படுத்தலாம். ஒவ்வொருவரும் சந்தித்து கலந்துரையாடுவதன் மூலம், கலந்துரையாடல் ஆவணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது கருத்துக்களைக் கோரும் டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் அமைச்சினால் கருத்துக்கள் கோரப்படலாம்.

## அமைச்சின் விடய நோக்கெல்லைக்குரிய பணிகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் கருத்துக் கோரல்

1.29 அமைச்சின் விடய நோக்கெல்லைக்குரிய பணிகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்காக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அல்லது நடைமுறையிலுள்ள சட்டமொன்றை திருத்துவதற்கு சர்ச்சைக்குரியனவாக இருக்கக்கூடிய விடயங்கள் தொடர்பான அல்லது ஏனைய அமைச்சர்களின் அமைச்சு விடய நோக்கெல்லைக்குரியதாக அமைச்சரவைப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக அவ்வமைச்சர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சு உரிய சகல தரப்பினர்களோடு கலந்தாலோசிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முக்கியமானதாக கொள்கை பிரேரிப்புகள் யாவும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனால் உரிய பணிகளை ஆரம்பிக்கும் அமைச்சு அல்லது கொள்கை ரீதியிலான பொறுப்பினைக் கொண்ட உரிய நிறுவனம் கொள்கை பிரேரிப்புகளினால் பாதிக்கப்படும் ஏனைய உரிய சகல அமைச்சுக்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் இயலுமான முதற்கட்டத்திலேயே கருத்துக்கள் கோரப்படுகின்றதெனவும் அவர்களுடைய கருத்துக்களை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு அவை அமைச்சரவைப்பத்திரத்தில் பொருத்தமானவாறு உள்ளடக்கப்பட்டுள்ள தென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் போன்ற நிறுவனங்களிடமிருந்தும் கருத்து கோருதல் அத்தியாவசியமானதாகலாம். அதற்கிணங்க பின்வருமாறு கருத்துக் கோரும் செயற்பாடானது சிபாரிசு செய்யப்படுகின்றது.

## அரசியல் கருத்துக் கோரல்

1.30 அரசியலமைப்பின் 47(4) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தாபிக்கப்படும் தேசிய அரசாங்கத்தில் கூட்டு அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் கோரப்படுகின்றமை பற்றி உறுதிப்படுத்திக் கொள்வது அமைச்சர்களின் பொறுப்பாகும்.

## அமைச்சுக்களிடமிருந்து கருத்துக் கோரல்

1.31 பின்வரும் சந்தர்ப்பங்களில் உரிய அமைச்சுக்களிடமிருந்து கருத்துக்களைக் கோருவது பொருத்தமானதாகும் -

(i) மேலதிக நிதி ஒதுக்கீட்டினை கோரும் அனைத்து முன்மொழிவுகள், ஏதேனும் சேவை தொடர்பில் கட்டணங்களை விதித்தல் அல்லது மீளமைப்பதற்கான முன்மொழிவுகள், உரிய அமைச்சரின் விடய நோக்கெல்லைக்குள் வரும் சட்டங்களின் கீழான அறவிடல்கள், அனுமதிப்பத்திர கட்டணங்கள், அரசாங்க - தனியார் பங்குடமை முன்மொழிவுகள், திறைசேரியின் நிதியோட்டத்திற்கு பாதிப்பேற்படுத்

தாதவையாக இருந்தாலும் அனைத்து முதலீட்டு முன்மொழிவுகளும் குறித்த அமைச்சரின் விடய நோக்கெல்லைக்குள் அரசுடமை தொழில் முயற்சிகள் மற்றும் சமமான நிறுவனங்களின் சம்பளம் மற்றும் விசேட கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளும் தொடர்பாக நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கருத்துக்களைக் கோரல்

(ii) அரசாங்க சேவைகளின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாக விடயங்கள் தொடர்பாக பொது நிர்வாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கருத்துக்களைக் கோரல்.

(iii) சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் இருதரப்பு உறவுகள் தொடர்பான உணர்வுபூர்வ விடயங்கள் தொடர்பான அனைத்து முன்மொழிவுகளும் தொடர்பாக வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கருத்துக்களைக் கோரல்.

(iv) அரசியலமைப்பு அல்லது சட்டவாக்க ஏற்பாடுகளைப் பாதிக்கின்ற அனைத்து முன்மொழிவுகளும் தொடர்பாக நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கருத்துக்களைக் கோரல்.

### நியதிச்சட்ட ஆலோசனை செயல்முறைகள்

1.32 சில விடயங்களில் அமைச்சர் சட்டத் தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு முன்னர் பின்பற்றப்படவேண்டிய ஒரு ஆலோசனை நடைமுறையைச் சட்டம் குறித்துரைக்கலாம். சம்பந்தப்பட்ட அமைச்சரும் அமைச்சும் தேவையான ஆலோசனை நடைபெற்றுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

### பொதுமக்கள் ஆலோசனை

1.33 நடைமுறைச் சாத்தியமானதும் பயன்மிக்கதுமான ஒரு கொள்கையை விருத்தி செய்வதில் உள்ள ஒரு முக்கிய விடயம் பொதுமக்கள், விடய நிபுணர்கள் மற்றும் உரிய தரப்பு குழுக்களோடு ஆலோசனை மேற்கொள்வதற்கான தேவை மற்றும் காலம் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதாகும். தேசிய கொள்கை, புதிய சட்டங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு செய்யப்படும் முக்கிய திருத்தங்கள், பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கருத்திட்டங்கள் சம்பந்தமான சகல முன்மொழிவுகளுக்குரியதான பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றது. முக்கியமாக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தொழில் சார்பாளர்களின் அமைப்புகள், அரச சார்பற்ற அமைப்புகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது சமூக குழுக்கள் என்பவற்றுடன் கலந்துரையாடுவது பொருத்தமானதாகும். ஆயினும் இந்த செயற்பாட்டின் போது ஏதேனும் அமைப்பொன்றின் குழுவொன்றின் அல்லது பிரதிநிதிகளின் அல்லது அரங்சாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் பல்வேறு பரப்புரையாளர்களின் (Lobbyists) கருத்துக்களின்பால் அரசாங்கம் விசேட கவனம் செலுத்துகின்றதென்னும் கருத்து உருவாவதை தடுப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும்.

## அமைச்சரவையின் நடவடிக்கைகள் தொடர்பிலான இரகசியத்தன்மை

1.34 அமைச்சரவை கூட்டங்கள் முறை சாராதவையும் இரகசியமானவையுமாகும். அமைச்சர் மற்றும் அதிகாரிகள் அடுத்துவரும் கூட்டங்களில் பரிசீலிக்கப் படக்கூடிய முன்மொழிவுகளை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கலந்தாலோசனை நடைமுறைகளுக்கு அப்பால் வெளிப்படுத்தலாகாது. அதேபோன்று அமைச்சரவை கூட்டங்களில் கலந்துகொள்ளும் உத்தியோகத் தர்கள் உரிய அமைச்சரவை அமைச்சர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் முறையான எழுத்துமூல அவதானிப்புரைகள் தொடர்பிலான விடயங்கள் தவிர கலந்துரையாடல்களின் உள்ளடக்கத்தின் தன்மையை அல்லது கூட்டங்களில் வெளிப்படுத்தப்படும் தனி அமைச்சர்கள் அல்லது அதிகாரிகளின் கருத்துக்களை அவர்கள் வெளியிடவோ அல்லது பதிவு செய்யவோ கூடாது. அமைச்சரவைக் கூட்டங்களில் நடைபெறும் கலந்துரையாடல்களின் விபரங்கள் முறையாகப் பதியப்படுவதோ அமைச்சரவைக் குறிப்புகளில் உள்ளக்கப்படுவதோ இல்லையென்பதோடு, எடுக்கப்பட்ட இறுதி தீர்மானம் மட்டும் நிகழ்ச்சிக்குறிப்புகளில் உள்ளடக்கப்படும்.

1.35 அமைச்சரவை குழு, உபகுழு மற்றும் அமைச்சர்கள் குழு கூட்டங்களும் முறைசாராதவையும் இரகசியமானவையுமாகும். அமைச்சர் மற்றும் அதிகாரிகள் குறித்த கூட்டங்களில் பரிசீலிக்கப்படக்கூடிய முன்மொழிவுகள் மற்றும் அது சம்பந்தமான விடயங்களை வெளிப்படுத்தலாகாது. இந்த குழுக்களின் கூட்டங்களில் நடைபெறும் கலந்துரையாடல்களின் விபரங்கள் இக் கூட்டங்களின் குறிப்புகளில் உரிய வகையில் பதியப்படுதல் வேண்டும். அமைச்சரவை குழுக்கள் மற்றும் அமைச்சரவை உபகுழுக்களின் சிபாரிசுகள் இரகசியமானவையாவதோடு, அங்கீகாரத்தின் பொருட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## அமைச்சரவைத் தீர்மானங்களை ஊடகத்திற்கு அறிவித்தல்

1.36 அமைச்சரவையினால் நியமிக்கப்படும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் / இணை ஊடகப் பேச்சாளர்களினால் அரசாங்க தகவல் திணைக்களத்தினதும் அமைச்சரவை அலுவலகத்தினதும் ஒத்தாசையுடன் நடாத்தப்படும் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் பொது மக்களுக்கு அமைச்சரவை தீர்மானங்களை அறிவிப்பதுடன், இந்தத் தீர்மானங்கள் அமைச்சரவை அலுவலகத்தினதும் அரசாங்க தகவல் திணைக்களத்தினதும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

## அமைச்சரவைப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு மற்றும் தாமதமாக கிடைக்கும் அமைச்சரவைப் பத்திரங்கள்

1.37 உரிய விடயங்கள் தொடர்பில் நேரடியாக தொடர்புடைய அமைச்சர்களினதும் நிறுவனங்களினதும் அவதானிப்புரைகளைப் பெறுவதற்கு அமைச்சரவை அலுவலகத்திற்கு இயலுமாகும் வகையில் அமைச்சரவைப் பத்திரங்களை காலகெடுவுக்கு முன்னர் பொறுப்பேற்கும் அதாவது அமைச்சரவைக் கூட்டம் நடாத்தப்படுவதற்கு பத்து (10) நாட்களுக்கு முன்னர் அமைச்சரவை அலுவலகத்திற்கு நேரடியாக அமைச்சரவைப் பத்திரங்களை கையளிக்கலாம்.

உரிய காலத்தில் அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பது, ஏனைய அமைச்சர்களுக்கு அமைச்சரவைப் பத்திரங்களை ஆராய்வதற்கும் தேவையாயின் அது தொடர்பில் எழுத்துமூலம் அவதானிப்புரைகளை சமர்ப்பிப்பதற்கும் போதுமான காலம் இருப்பதை உறுதி செய்யும்.

1.38 ஓர் அமைச்சர் அமைச்சரவைக்கு காலம்தாழ்த்தி அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்க விரும்புமிடத்து, சம்பந்தப்பட்ட அமைச்சர் அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பித்தலுக்கான காலக்கெடுவிற்கு முன்னர் நிகழ்ச்சி நிரலில் அதனைச் சேர்த்துக் கொள்வது ஏன் அவசியம் என்பதை விளக்கி அமைச்சரவைப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுதலுக்காக அமைச் சரவையின் செயலாளர் ஊடாக சனாதிபதி அவர்களின் அனுமதியை நாடவேண்டும். அமைச்சரவையின் செயலாளர் சனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய அத்தகைய அமைச்சரவைப் பத்திரம் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பார்.

### அமைச்சரவைப்பத்திரங்களுக்கான திருத்தங்கள்

1.39 அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரமொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், அதன் அடிப்படை உள்ளடக்கத்திற்கு தாக்கம் ஏற்படாத சிறு திருத்தங்களை மாத்திரம் மேற்கொள்வதற்கு இடமளிக்கப்படும். அமைச்சரவைப்பத்திரத்தின் அடிப்படை உள்ளடக்கம் மாற்றமடையும் விதத்தில் திருத்தங்கள் எதனை யும் செய்ய வேண்டுமாயின், ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள மூலப்பத்திரத்தை மீளப்பெற்று தேவையான திருத்தங்களை உள்ளடக்கி புதிய அமைச்சரவைப்பத்திரமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

1.40 அமைச்சரவை அலுவலகம் ஒரு அமைச்சரவைக் கூட்டத்திற்கு முன்னர் ஒரு அமைச்சர் இன்னொரு அமைச்சரின் அமைச்சரவைப்பத்திரத்திற்கு முன்வைக்கும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாது. உரிய அமைச்சரவைப் பத்திரத்தைப் பரிசீலிக்கும் கூட்டத்தில் அவ்வமைச்சர் ஏதேனும் உத்தேச மாற்றங்களை முன்வைக்க வேண்டும் அல்லது உரிய கூட்டத்தில பரிசீலிக்கும் பொருட்டு எழுத்துமூல அவதானிப்புரைகளை சமர்ப்பிக்கலாம்.

### அமைச்சரவைப் பத்திரங்களை மீளப்பெறுதல்

1.41 அமைச்சரவை அலுவலகம் இணையவழி முறைமையில் ஒரு இறுதி நிகழ்ச்சி நிரலை வெளியிட்டதும், ஒரு அமைச்சரவைப் பத்திரம் எந்தக் கூட்டத்திற்கென தயாரிக்கப்பட்டதோ, அக் கூட்டத்திலேயே மீளப் பெறப்பட முடியும் அல்லது ஒத்திவைக்கப்பட முடியும். அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு அனுமதியளித்த அமைச்சர் இயன்றவரை விரைவாக மீளப் பெறல் அறிவித்தலை எழுத்து மூலம் அமைச்சரவை செயலாளருக்கு வழங்கவேண்டு மென்பதோடு, இதற்கிணங்க அமைச்சரவையின் தலைவருக்கு அறிவிக்க முடியும்.

### அமைச்சரவைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரல் மற்றும் அமைச்சரவைக் குழுக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரல்

1.42 அமைச்சரவை செயலாளர் சனாதிபதியுடன் உசாவுதலைச் செய்து அமைச்சரவை கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரலையும் தேவையான சந்தர்ப்பங்களில் குறைநிரப்பு நிகழ்ச்சிநிரலையும் தயாரிப்பார்.

அதேபோன்று, அமைச்சரவை செயலாளர் அமைச்சரவை குழுக்களின் தலைவர்களுடன் உசாவுதலைச் செய்து அமைச்சரவை குழுக் கூட்டங் களுக்கான நிகழ்ச்சிநிரலையும் தேவையான சந்தர்ப்பங்களில் குறைநிரப்பு நிகழ்ச்சிநிரலையும் தயாரிப்பார்.

1.43 விசேட காரணங்கள் இருந்தால் அல்லது அமைச்சரவையின் விசேட கவனம் செலுத்த வேண்டிய தேசிய முக்கியதுவம் வாய்ந்த விடயம் இருந்தால் அமைச்சரவைக்கு நேரடியாக அமைச்சரவைப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சர் ஒருவர் எதிர்பார்க்கின்றாராயின் அது சம்பந்தமாக முன்கூட்டியே சனாதிபதியின் உடன்பாட்டினைப் பெற்றுக் கொள்தல் வேண்டும். அமைச்சரவைச் செயலாளர் அதன் பின்னர் குறித்த அமைச்சரவைப் பத்திரங்களை உரிய கூட்டத்தில் அட்டவணைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்.

### ஏதேனும் விடயமொன்று சம்பந்தமாக அமைச்சரவைக்கு வாய்மொழிமூல விடயங்களைச் சமர்ப்பித்தல்

1.44 குறிப்பிட்ட அவசர நிலை அல்லது இரகசியத் தன்மைவாய்ந்த விடயத்தில் அல்லது ஒரு நடப்பு விடயம் தொடர்பாக அமைச்சரவைக்கு அறியத் தருவதற்கு, அல்லது ஒரு முன்மொழிவிற்கான பூர்வாங்க ஆதரவைப் பரிசீலிப்பதற்கு ஓர் அமைச்சர் அமைச்சரவை அல்லது அமைச்சரவை குழுக் கூட்டத்தில் ஒரு வாய்மொழிமூல விடயத்தை எழுப்பலாம். அத்தகைய வாய்மொழிமூல விடயங்களை முன்வைப்பதற்கு அமைச்சரொருவர் எதிர்பார்ப்பாராயின் அமைச்சரவைக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அது பற்றி சனாதிபதி அவர்களுக்கு அறியச் செய்விப்பதற்கு இயலுமாகும் வகையில் அது குறித்து அமைச்சரவைச் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்.

1.45 சனாதிபதி அவர்களின் அனுமதியின் மீது வாய்மொழிமூலம் முன்வைக்கப்படும் விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படும் அமைச்சரவைத் தீர்மானம் “பிற கருமங்கள்” என்பதன் கீழ் ஏற்புடையதானவாறு அமைச்சரவைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக்குறிப்புகளில் / அமைச்சரவைக் குழு கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக் குறிப்புகளில் பதிவு செய்யப்படும்.

## அமைச்சரவை மற்றும் அமைச்சரவை குழு கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக்குறிப்புகள்

1.46 அமைச்சரவைக் கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரலுக்கு அமைவாக குறித்த கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ள அமைச்சரவைப்பத்திரங்களும் அதற்கு முன்னைய கூட்டத்தின் வரைவு தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்பும் அமைச்சரவைக் கூட்டம் நடாத்தப்படும் திகதிக்கு முன்னைய வாரத்தில் வெள்ளிக்கிழமையன்று அமைச்சரவை அலுவலகத்தினால் அமைச்சர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1.47 அமைச்சரவைக் கூட்டங்களில் அங்கீகரிக்கப்படும் தீர்மானங்கள் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் உறுதிப்படுத்தப்படும். அத்தகைய ஏதேனும் திருத்தங்கள் பிரேரிக்கப்பட்டால் குறித்த திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானமானது உறுதிப்படுத்தப்படும். ஆயினும், அவசரமாக நடைமுறைப்படுத்தப்படவேண்டிய தீர்மானங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அதே கூட்டத்தில் உறுதிப்படுத்தப்படும். அமைச்சரவை யினால் உறுதிப்படுத்தப்படும் அத்தகைய தீர்மானங்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிய அமைச்சுக்களின் செயலாளர் களுக்கும் உரிய அதிகாரபீடங்களுக்கும் அமைச்சரவைச் செயலாளரினால் உடனடியாக தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

ஒவ்வொரு அமைச்சரவைக் கூட்டமும் முடிவுற்றதன் பின்னர் அமைச் சரவைக் கூட்டத்திற்கான நிகழ்ச்சிக் குறிப்புகள் மற்றும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட முன்னைய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உட்பட அதே கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவின் தீர்மானங்கள் / சிபாரிசுகள் அமைச்சரவை அலுவலகத்தினால் இணைய வழி முறைமையில் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் ஏனைய உரிய அதிகாரபீடங்களுக்கும் வெளியிடப்படுவதோடு, தேவையான சந்தர்ப்பங்களில் வன்பிரதியிலும் வழங்கப்படும்.

1.48 கூட்டமொன்றுக்கான நிகழ்ச்சி நிரலின் ஏதேனும் விடயமொன்றுக்குரியதாக மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல் தொடர்பான சகல விபரங்களும் அமைச் சரவைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக் குறிப்பில் உள்ளடக்கப்படமாட்டாது. அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானம் அமைச்சரவைப்பத்திரம் மூலம் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்ட பிரேரிப்புகளிலிருந்து மாறுபடுமாயின் எவரேனும் அமைச்சரொருவரினால் இது சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களைக் குறிப்பிடாமல் உரிய தீர்மானம் எடுக்கப்படும் போது கவனத்திற் கொள்ளப்பட்ட விசேட காரணங்கள் சுருக்கமாக பதிவுசெய்தல் இடம்பெறும்.

### அமைச்சரவைக் கூட்டங்கள்

1.49 அமைச்சரவை செயலாளரினால் சனாதிபதியின் ஆலோசனையின் மீது அமைச்சரவை கூட்டங்கள் கூட்டப்படும். அமைச்சரவை கூட்டமானது வருடத்தின் பெரும்பாலான வாரங்களில் வழமையாக திங்கட்கிழமைகளில் சனாதிபதி செயலகத்தில் நடாத்தப்படும். விசேட விடயமொன்று / முக்கிய விடயங்கள் கலந்துரையாடுவதற்காக தேவைப்படுமிடத்து, விசேட அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்தப்படலாம்.

1.50 அமைச்சரவை குழுக்கள் தேவையானவாறு அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை கூடுமென்பதுடன், அமைச்சரவை குழுக்களின் முறையான செயற்பாட்டிற்கு அமைச்சரவை அலுவலகத்தினால் வசதிகள் செய்யப்படும்.

1.51 ஏதேனும் விடயமொன்று சார்பில் நியமிக்கப்படும் அமைச்சரவை உபகுழுக்கள் அல்லது அமைச்சரவைக் குழுக்கள் தேவையானவாறு கூடலாமென்பதோடு, உரிய தீர்மானத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட கூட்ட அழைப்பாளரினால் குறித்த குழுக்களுக்கு ஒத்தாசை வழங்கப்படும்.

### கூட்டங்களில் தலைமை வகித்தல்

1.52 அமைச்சரவைக் கூட்டங்களுக்கு சனாதிபதி தலைமை தாங்குவார். சனாதிபதி இல்லாதவிடத்து சனாதிபதி அவர்களின் ஆலோசனையின்மீது பிரதம அமைச்சர் தலைமை தாங்குவார்.

அமைச்சரவை குழுக்கள், அமைச்சரவை உப குழுக்கள் மற்றும் அமைச்சர்கள் குழுக்கள் என்பவற்றிற்கு நியமிக்கப்பட்ட தலைவர் அல்லது தலைவர் இல்லாதவிடத்து, சமூகமளித்துள்ள சிரேட்ட குழு உறுப்பினர் தலைமை தாங்குவார்.

### அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் குழுக் கூட்டங்களுக்கும் அமைச்சர்களின் வருகை

1.53 அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் ஒவ்வொரு கூட்டத்திற்கும் வருகைதர வேண்டும். தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஏதேனும் அமைச்சரவைக் கூட்டமொன்றுக்கு வருகைதருவதற்கு இயலாமற் போகும் சந்தர்ப்பங்களில் அவர் வருகைதராமை பற்றி சனாதிபதிக்கு அறிவிப்பதற்கு இயலுமாகும் விதத்தில் முன்னதாகவே அமைச்சரவை செயலாளருக்கு அறிவிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1.54 சனாதிபதி உட்பட அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர் ஒருவர் தனிப்பட்ட ரீதியில் அக்கறையுள்ள விடயமொன்று அமைச்சரவையினால் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பத்தில் ஏற்புடைத்தானவாறு சனாதிபதி அல்லது உரிய அமைச்சர் அது பற்றி அமைச்சரவைக்கு அறிவித்ததன் பின்னர், குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இந்த ஏற்பாடுகள் அமைச்சரவை குழு, உபகுழு மற்றும் அமைச்சர்கள் குழு கூட்டங்களுக்கும் ஏற்புடையதாகும்.

1.55 அமைச்சர்கள் தாம் உறுப்பினர்களாக இருக்கும் சகல அமைச்சரவை குழு கூட்டங்களுக்கு, உப குழு கூட்டங்களுக்கு மற்றும் அமைச்சர்கள் குழுக் கூட்டங்களுக்கு சமுகமளிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அமைச்சர் களுக்கு அத்தகைய கூட்டங்களுக்கு சமூகமளிக்க முடியாதிருப்பின், கூட்டத்திற்கு முன்னர் அவர்களின் அமைச்சுச் செயலாளர்கள் அதுபற்றி அமைச்சரவைச் செயலாளருக்கு அல்லது உரிய குழுவின் செயலாளருக்கு / கூட்ட அழைப்பாளருக்கு அறிவிக்க வேண்டும். இந்த நடைமுறை உரிய கூட்டத்தின் தலைவருக்கு அறிவிப்பதற்கும், நிகழ்ச்சி நிரலுக்கு தேவையான மாற்றங்கள் செய்வதற்கும் இடமளிக்கும்.

1.56 அமைச்சரவை குழுக் கூட்டத்திற்குச் சமூகமளிக்க முடியாதிருக்கும் குறித்த குழுவின் உறுப்பினராக இருக்கும் அமைச்சர் ஒருவர் அவருடைய அமைச்சரவைப் பத்திரம் சம்பந்தமாக கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு பிறிதொரு அமைச்சருக்கு கையளிப்பதற்கு அல்லது அவருக்கு சமூகமளிக்க முடியாததன் காரணமாக வேறொரு கூட்டத்திற்கு பிற்போடுமாறு வேண்டுகோள் விடுக்கலாம்.

1.57 அமைச்சரவை குழுவினால் குழு உறுப்பினராக இல்லாத ஓர் அமைச்சரின் விடய நோக்கெல்லையின் கீழ் வரும் விடயமொன்றை கலந்துரை யாடும்போது, குழுவின் தலைவரினால் அவர் அக் கூட்டத்தில் அழைப்பின் பேரில் கலந்துகொள்வற்கு அனுமதி வழங்கலாம்.

## அமைச்சரவைக் கூட்டங்கள் மற்றும் குழுக் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண்

1.58 அமைச்சரவைக் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை. தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவையின் தலைவராக சனாதிபதியினால் இது சம்பந்தமாக தீர்மானிக்கப்படும்.

1.59 அமைச்சரவை குழு கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் தொடர்பில் முறையான கூட்ட நடப்பெண் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களின் வருகை பொருத்தமானதாகும். பரிசீலனையில் உள்ள விடயங்களின் முக்கியத்துவம் உரிய அமைச்சர்களின் பிரசன்னம் மற்றும் சில அமைச்சர்களே சமூகமளித்திருப்பின் தீர்மானம் மேற்கொள்வதன் உசிதம் ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டு, கூட்ட நடப்பெண்ணானது தலைவரினால் தீர்மானிக்கப்படும்.

## அமைச்சரவைக் கூட்டங்களில் அதிகாரிகளின் பங்குபற்றுதலும் அழைப்பின் பேரில் வருகையும்

1.60 அமைச்சரவைச் செயலாளர் மற்றும் அவருக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு அமைச்சரவை அலுவலகத்தின் மேலதிக செயலாளர் ஒருவர் அல்லது அதன் சிரேட்ட உதவிச் செயலாளர் ஒருவர் உரிய அமைச்சரவை கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். அமைச்சரவைக்கு ஏதேனும் விடயமொன்று சம்பந்தமாக தெளிவுபடுத்திக் கொள்வதற்கு அல்லது விசேட முன்வைப்புகளைச் செய்வ தற்கு சிரேட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு அழைப்பின் பேரில் வருகை தருபவர்களுக்கு அமைச்சரவைக்கு சமூகளிக்குமாறு அழைப்புவிடுக்கலாம்.

### அமைச்சரவைக் குழுக் கூட்டங்களில் அதிகாரிகளின் வருகை

1.61 அமைச்சரவைச் செயலாளர் அல்லது அமைச்சரவைச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அலுவலகத்தின் சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சரவைக் குழுக்களின் செயலாளராக செயலாற்றுவார். அவருக்கு மேலதிகமாக அமைச்சரவை குழுவுக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு அமைச்சரவையினால் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் இந்தக் குழுவில் கலந்துகொள்வர். அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழ் வரும் நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் உட்பட அழைப்பின் பேரிலான உத்தியோகத்தர்களையும் குழு கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு குறித்த குழுவின் தலைவரின் அனுமதி அத்தியாவசியமானதாகும்.

### அமைச்சரவைச் செயலாளர் மற்றும் அமைச்சரவை அலுவலகம்

1.62 அமைச்சரவை அலுவலகம், அமைச்சரவை செயலாளரின் தலைமையில் சனாதிபதியின் அதிகார வரம்பினுள் உள்ள அலுவலகமொன்றாகும். அமைச்சரவைச் செயலாளர் ஓர் அரசாங்க உத்தியோகத்தராவார். இந்தப் பதவிக்கு கையளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைவாக அவர் அரசியல் ரீதியாக நடுநிலையானவராக செயல்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1.63 அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவைச் செயலாளர் சனாதிபதியினால் நியமிக்கப்படுவதோடு, சனாதிபதியின் கட்டளைக்கு உட்பட்டு அமைச்சரவை அலுவலகத்திற்கு பொறுப்பாக அதன் பணிகளை நிறைவேற்றுவதும் சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் கையளிக்கப்படும் பணிகள் அல்லது நோக்கங்கள் இருப்பின் அவற்றை நிறைவேற்றுவதும் அமைச்சரவைச் செயலாளரின் பொறுப்பாகும். அமைச்சரவை தீர்மானங்களின் பாரபட்சமற்ற பதிவிற்கும் அமைச்சரவை நடைமுறைகளின் தயாரிப்பிற்கும் நிர்வாகத்திற்கும் நேரடியாகச் சனாதிபதிக்குப் பொறுப்புக்கூற வேண்டியவ ராவார். அமைச்சரவைச் செயலாளர் அமைச்சரவைக் கூட்டங்களின் இரகசியத் தன்மை மற்றும் அமைச்சரவை முறைமையின் பாரபட்பட்சமற்ற மற்றும் பயனுறுதிமிக்க செயற்பாடு ஆகியவற்றிற்கு அமைச்சரவைக்கு பொறுப்புக்கூற வேண்டியவராவார்.

## இரண்டாம் அத்தியாயம்
## அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டம்

### அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம்

2.1 வருடாந்த அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டம் அரசாங்கத்தின் உத்தேச புதிய சட்டவாக்கலின் / திருத்த சட்டவாக்கலின் முன்னேற்றத்தைத் தயாரிப்பதற்கு மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான முன்னுரிமைகள் இனங்காணப்படும் ஒரு கட்டமைப்பினை வழங்குகிறது. சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழுவினால் இந்த நிகழ்ச்சித்திட்டம் நுணுக்கமாக மேற்பார்வை செய்யப்படுகின்றது.

2.2 பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டமூலங்கள் முன்னுரிமை ஒழுங்கில் ஒழுங்குபடுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இடம்பெறுகின்றது. அரசாங்கத்தின் அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டம் சட்டமூலங்களை வரைவதனை மட்டும் உள்ளடக்கும். அது கட்டளைகள் / பிரகடனங்கள் / விதிகள் / துணைச் சட்டங்கள் / ஒழுங்குவிதிகள் போன்ற கீழ்நிலைச் சட்டங்கள் வரைதலை உள்ளடக்கப்படமாட்டாது.

2.3 அரசாங்க தேவை மாற்றங்களுக்கு அமைவான சந்தர்ப்பங்களில் சட்டங்களை வேண்டி நிற்கும் புதிய விடயங்கள் மற்றும் காலப்போக்கில் முன்னுரிமைகள் மாற்றம் போன்ற விடயங்களின் மீது அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டம் திருத்தப்படும். நிகழ்ச்சித்திட்டத்தின் விபரங்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட சட்டத்திற்கு வழங்கப்படும் முன்னுரிமை ஆகியன பாராளுமன்றத்தில் அரசாங்கம் அதன் அலுவல்களை முகாமைத்துவம் செய்வதற்கு இன்றியமையாதது.

### அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல்

2.4 சட்டங்களை ஆக்குவதற்கான அதிகாரம் பாராளுமன்றத்துக்கு இருக்க வேண்டுமென அரசியலமைப்பின் 75 ஆம் உறுப்புரை குறிப்பிடுகிறது. 75 முதல் 80 வரையான உறுப்புரைகள் பாராளுமன்றத்தின் சட்டவாக்க செயற்பாட்டிற்குப் பொருந்தும் நடைமுறையை விதித்துரைக்கின்றன. அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டம் அமைச்சரவையின் தீர்மானங்களில் உள்ளடங்கியிருக்கும் அரசாங்கத்தின் கொள்கைகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு ஏற்ற வண்ணம் கட்டமைக்கப்படும்.

2.5 அதற்கமைய, தமது விடயநோக்கெல்லையின் கீழுள்ள பணிகள் சம்பந்தமாக உரிய ஆண்டினுள் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் புதிய சட்டங்கள் மற்றும் திருத்தங்களுக்கான உத்தேச பட்டியலொன்றை முதலில் கொள்கை அங்கீகாரத்திற்காக இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

2.6 அமைச்சரவையினால் அமைச்சரவைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரிப்புகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டதன் பின்னர் உத்தேச புதிய சட்டங்கள் / திருத்த சட்டங்கள் உரிய ஆண்டிற்கான அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கையினை எடுக்கும் பொருட்டு சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழுவுக்கு தொடர்புபடுத்தப்படும்.

2.7 அமைச்சரவையினால் வழங்கப்படும் ஆலோசனைகளை கவனத்திற்கு எடுத்துக்கொண்டு அமைச்சுக்கள் அனைத்திற்குமான அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னுரிமை பட்டியலானது தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

2.8 வருடாந்த அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிக்கும் போது அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமை, சர்வதேச ரீதியிலான கடப்பாடுகள், அரசாங்க நிதி இலக்குகள், சந்தை ஒழுங்குறுத்துகை மற்றும் அமைச்சரவையினால் திட்டவட்டமாக குறித்துரைக்கப்படும் விடயங்கள் என்பவற்றின்பால் உரிய கவனம் செலுத்துவது அத்தியாவசியமானதாகும். அத்துடன் பாராளுமன்ற பணிகளை ஒழுங்குபடுத்துதல் போன்ற விடயங்கள் கவனத்திற்கொள்ளப்படுவது பொருத்தமானதாகும். அதேபோன்று, இந்த கைநூலின் 1.17(III)(ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபுணர் குழுவின் ஒத்துழைப்பினை இதன் பொருட்டு பெற்றுக்கொள்வதற்கு சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

2.9 சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழுவின் சிபாரிசினை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

2.10 ஆயினும் விசேட நிலைமைகளின் கீழ் அமைச்சர் ஒருவருக்கு அத்தகைய ஏதேனும் சந்தர்ப்பத்தில் புதிய சட்டமொன்றை அல்லது நிலவும் சட்டமொன்றுக்கு திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு பிரேரிப்புகளை சமர்ப்பிப்பதற்கு அல்லது ஏற்கனவே அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள முன்னுரிமையை மாற்றுமாறு அமைச்சரவையிடம் கோரிக்கையை முன்வைக்கலாம்.

2.11 அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னுரிமை பட்டியலானது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், அதன் முன்னுரிமை பட்டியலுக்கமைவாக தமது திணைக்களத்தின் பணிகளைத் திட்டமிட்டுக்கொள்வதற்கு அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதியானது அமைச்சரவைச் செயலாளரினால் சட்டவரைநருக்கு அறிவிக்கப்படும்.

## அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தைக் கண்காணித்தல்

2.12 அமைச்சரவை காலத்துக்குக்காலம் சட்டவாக்க நடைமுறையை வருடாந்தம் முறையாக மீளாய்வு செய்து, தேவையானவாறு முன்னுரிமைகளை மாற்றியமைக்கலாம். சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழு காலாண்டு முடிவில் அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்தை அமைச்சரவைக்கு அறிக்கையிடலாம்.

2.13 துறைசார் மேற்பார்வைக் குழு / அமைச்சரவை ஆலோசனைக் குழு முன்னே இருக்கும் சட்டங்கள் அடங்கலாகத் தாம் பொறுப்பு வகிக்கும் அமைச்சின் விடயநோக்கெல்லைக்குள் வரும் ஏதேனும் சட்டமூலத்தின் முன்னேற்றம் பற்றி அமைச்சரவை ஆலோசனைக் குழுவிலும் பாராளுமன்றத்திலுள்ள வேறு உரிய குழுக்களிலும் அதேபோன்று தமது அமைச்சரவைச் சகாக்களுடன் கலந்துரையாடுவதற்கு அமைச்சர்கள் எவ்வேளையிலும் தயாராக இருத்தல் வேண்டும்.

## சட்டவாக்க ஒருங்கிணைப்பாளர்

2.14 அமைச்சரவை அலுவலகப் பணியாட்டொகுதியின் ஓர் உறுப்பினர் அரசாங்க சட்டவாக்க ஒருங்கிணைப்பாளராக அமைச்சரவையின் உடன்பாட்டின் மீது அமைச்சரவை செயலாளரினால் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல், விருத்திசெய்தல், கண்காணித்தல் மற்றும் திருத்தியமைத்தல் சம்பந்தமாக சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழுவுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு ஒத்தாசையை சட்டவாக்க ஒருங்கிணைப்பாளர் செய்தல் வேண்டும்.

## அரசாங்க சட்டவாக்க செயற்பாடு

2.15 அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்க்கப்பட்ட புதிய சட்டமொன்றை வரைதவதன் மூலம் அல்லது நடைமுறையிலுள்ள சட்டமொன்றை திருத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றினையடையும் பொருட்டு முதலில் உரிய தரப்பினர்களின் கருத்துக்களை கோருவது அத்தியாவசிய காரணியாகையினால் இந்தக் கைநூலின் முதலாம் அத்தியாயத்தின் 1.28 தொடக்கம் 1.33 வரையிலான உபபந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி கருத்துக்களை கோருவதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.

2.16. கருத்துக்கோரல் செயற்பாடானது பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர், குறித்த செயற்பாட்டின் பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு உரிய வரிசை அமைச்சினால் உத்தேச சட்டமூலத்தை / திருத்த சட்டமூலத்தை வரையும் பொருட்டு சட்டவரைநரினால் அடிப்படையாகக் கொள்ளவேண்டிய விரிவான கருதுகோள்ப்பத்திரம் / ஆரம்ப வரைவினை தயாரித்து அமைச்சரவைப் பத்திரமொன்றின் மூலம் தமது அமைச்சரின் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

2.17 ஏதேனும் புதிய சட்டமூலமொன்று / திருத்த சட்டமூலமொன்று சம்பந்தமாக கருத்துக்களை கோரும் செயற்பாட்டிலிருந்து விலக வேண்டுமாயின் அதன் பொருட்டு தெளிவானதும் போதுமானதுமான காரணங்கள் உத்தேச கருதுகோள் பத்திரம் / ஆரம்ப வரைவினை முன்வைக்கும் அமைச்சரவைப்பத்திரத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.18 மேல் 2.16 இலும் 2.17 இலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவைப்பத்திரங்களாவன சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழுவின் சிபாரிசுக்காக அமைச்சரவை அலுவலகத்தினால் தொடர்புபடுத்தப்படும்.

2.19 சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழுவினால் சமர்ப்பிக்கப்படும் சிபாரிசுகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் உத்தேச சட்டமூலத்தை வரைவதற்காக சட்டவரைநருக்கு அனுப்பிவைக்கப்படும். ("சட்டமூலம்" என்னும் போது புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் அதேபோன்று நடைமுறையிலுள்ள சட்டமொன்றை திருத்துவதற்குமாக தயாரிக்கப்படும் வரைவாகும்)

## சட்டவரைநருக்கு ஏற்புடையதான பணிகளும் சட்டவரைநரினால் சட்டங்களை வரையும் செயற்பாடும்

2.20 அரசாங்க சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக அமைச்சரவை யினால் அங்கீகரிக்கப்படும் கொள்கை அமுலாக்கத்திற்கு புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் அதேபோன்று நடைமுறையிலுள்ள சட்டமொன்றை திருத்துவதற்குமாக சட்டமூலங்களை வரைதலும் சட்டவரைநரின் முக்கிய வகிபாகமாகும்.

2.21 அரசியலமைப்பு, ஏனைய எழுத்துமூல சட்டங்கள், நீதிமன்ற தீர்ப்புவழிச் சட்டங்கள் மற்றும் தாபன விதிக்கோவையில் அடங்கியுள்ள ஒழுங்குவிதிகள் ஆகியவற்றிற்கு ஏற்ப சட்டங்களை வரைவதற்கு சட்டவரைநர் பொறுப்பாகவிருப்பார்.

2.22 மொழி தொடர்புபட்ட அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இரண்டு அரசகரும மொழிகளிலும் (சிங்களம் மற்றும் தமிழ்) அத்துடன், இணைப்பு மொழியான ஆங்கிலத்திலும் சட்டமூலங்களை சட்டவரைநரானவர் வரைதல் வேண்டும்.

2.23 மேல் 2.19 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைச்சரவையின் கொள்கைத் தீர்மானத்திற்கு அமைவாக சட்டவரைநரினால் வரையப்படும் ஆரம்ப சட்டமூலமானது முதலில் அவதானிப்புரைகளுக்காக உரிய அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2.24 அமைச்சரவையின் கொள்கை ரீதியிலான அங்கீகாரத்துடன் குறித்த சட்டமூலத்தின் இயைபாம் தன்மை சம்பந்தமாக உரிய அமைச்சிடமிருந்து சான்றுபடுத்துதல் கிடைத்ததன் பின்னர் குறித்த சட்டமூலத்தின் பிரதி அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளுடனான இயைபாம் தன்மை தொடர்பான சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சட்டமா அதிபருக்கு தொடர்படுத்தல் வேண்டும்.

2.25 சட்டமா அதிபர் இறுதி வரைவின் அரசியலமைப்பிற்கு இயைபாந்தன்மை தொடர்பாகக் கருத்துக்களை வெளியிடுவதோடு, சட்டமா அதிபரின் சான்றிதழ் கிடைக்கப்பெற்றதன் பேரில், சட்டவரைநர் சட்டமூலத்தை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கோரிக்கை விடும் அமைச்சுக்கு அனுப்புவார். சட்டங்களைத் திருத்தும் விடயத்தில், நடைமுறையிலுள்ள சட்டமொன்றுக்கு செய்யப்படும் திருத்தங்களின் விளைவுகள் சம்பந்தமாக கவனம் செலுத்தி மும் மொழிகளிலுமான சட்டவலுக்கொண்ட ஓர் அறிக்கை வரைபுடன் சேர்த்து உரிய அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2.26 உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், சட்டமா அதிபரின் அரசியலமைப்பிற்கு இயைபாந் தன்மை பற்றிய சான்றிதழோடு சட்டமூலத்தை சட்டவாக்கம் தொடர்பான அமைச்சரவை குழுவுக்கு சமர்ப்பிக்கவேண்டு மென்பதோடு, மேலும் குறித்த சட்டமூலம் தொடர்பான விடயங்களை ஆராயவேண்டுமென அமைச்சரவை கருதுமாயின் சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை குழுவுக்கு தொடர்புபடுத்தலாம். அவ்வாறல்லாதுவிடின் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்படும்.

2.27 மேற்போந்த செயற்பாடு நியாயமான காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப் படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இயலுமாகும் விதத்தில் அரசாங்க சட்டவாக்கம் பற்றிய ஒருங்கிணைப்பாளரினால் உரிய சகல தரப்பினர்களும் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.28 புதிய சட்டமொன்றினை வரைவதற்கான அல்லது வலுவிலிருக்கும் சட்டமொன்றினை திருத்துவதற்கான கோரிக்கைகளுக்கு மேலதிகமாக தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சுக்களின் செயலாளர்களினால் தாபனவிதிக்கோவையின் XXXIII ஆம் அத்தியாயத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கீழ்நிலைச் சட்டங்களின் (கட்டளைகள் / பிரகடனங்கள் / விதிகள் / துணைச் சட்டங்கள் / ஒழுங்குவிதிகள் போன்ற கீழ்நிலைச் சட்டங்கள்) வரைவுகளை மீளாய்வு செய்து முற்றாக்குமாறு சட்டவரைநரிடம் கோரிக்கை விடுக்கலாம். இச் சந்தர்ப்பத்தில் உரிய அமைச்சுக்கள் சட்டவரைநருக்கு குறித்த கீழ்நிலைச் சட்டங்களை மும்மொழிகளிலும் சமர்ப்பித்தல் அத்தியாவசியமானதாகும்.

2.29 அதேபோன்று தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களிலுள்ள விடயங்கள் தமது அமைச்சின் விடயநோக்கெல்லையின் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் உரிய அமைச்சின் செயலாளரினால் செய்யப்படும் கோரிக்கையின் மீது தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலமானது சட்டவரைநரினால் மீளாய்வு செய்யப்பட்டு, இறுதி வரைவின் செம்மைத் தன்மையினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

### அரசாங்க சட்டவாக்க செயற்பாட்டிற்கு ஏற்புடையதான சட்டமா அதிபரின் பணி

2.30 சட்டமூலமொன்றை / திருத்த சட்டமூலமொன்றை வரைவதற்கு உரியதான சட்ட பிரச்சினைகள் சம்பந்தமான அமைச்சு செயலாளர் ஒருவர் சட்டமா அதிபரின் கருத்தினைக் கோரும் போது சட்டமா அதிபர் அரசியலமைப்பு, தாபனவிதிக்கோவை மற்றும் எழுத்துமூலமான வேறு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் அவருடைய கருத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

2.31 அரசியலமைப்பின் 77 ஆம் உறுப்புரையின் பிரகாரம் உரிய சட்டமூலம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்து பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கும் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த சட்டமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு ரீதியான கோட்பாடுகளுக்கு அமைவாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவது சட்டமா அதிபரினால் செய்யப்படுதல் வேண்டும்.

3.1 அமைச்சர்கள் எழுத்துமூல மற்றும் வாய்மொழிமூல வினாக்கள் ஊடாகப் பாராளுமன்றத்திற்கு நேரடியாகப் பதில்கூற வேண்டியவர்களாகவும் உள்ளனர். நடப்பு முக்கியத்துவம் மிக்க ஒரு விடயத்தின் மீதான ஓர் அவசர விவாதத்தில் பங்குபற்றுவதற்கும், ஒரு பொதுவான விவாதத்தில் அரசாங்கத்தின் பணிகள் பற்றி சபைக்கு அறியத்தருவதற்கும் அல்லது பொது முக்கியத்துவம் மிக்க விடயங்களில் பாராளுமன்றத்திற்கு அறிக்கைகள் விடுவதற்கும் அவர்கள் வேண்டப்படலாம்.

3.2 இந் நடவடிக்கைகளில் பங்குபற்றுவதுபற்றி அமைச்சர்களுக்கான நிலையியல் கட்டளை மற்றும் வழிகாட்டலானது பாராளுமன்ற செயலாளர் நாயகத் தினாலும் பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகத்தினாலும் பாராளுமன்ற அரசாங்க கட்சியின் முதற்கோலாசானின் அலுவலகத்தினாலும் காலத்திற்கு காலம் வெளியிடப்படும்.

3.3 தனது அமைச்சுக்கான விடயநோக்கெல்லைக்குரிய ஏதேனும் சட்டமூலம், கட்டளைகள் / பிரகடனங்கள் / விதிகள் / துணைச் சட்டங்கள் / ஒழுங்குவிதிகள் போன்ற கீழ்நிலைச் சட்டங்கள் பற்றி பாராளுமன்றத்தில் கலந்துரையாடும் சந்தர்ப்பத்திலும் அது சம்பந்தமான விவாதங்கள் நடாத்தப்படும் சந்தர்ப்பத்திலும் வாக்களிக்கும் சந்தர்ப்பத்திலும் குறித்த அமைச்சரானவர் கட்டாயமாக பாராளுமன்றத்தில் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

### பாராளுமன்றத்தில் அமைச்சர்களினால் செய்யப்படும் கூற்றுக்கள்

3.4 அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் செய்யும் உத்தியோகபூர்வ கூற்றுகள் தமது அமைச்சுக்கான விடயநோக்கெல்லைக்குள் வரும் விடயங்களுக்கும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு முன்வைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் சட்டங்கள் போன்ற ஏனைய விடயங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

### வாய்மொழிமூல அல்லது எழுத்துமூல விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களுக்கு பதிலளித்தல்

3.5 ஓர் அமைச்சர் அமைச்சுப் பொறுப்புக் கொண்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் தொடர்பான வாய்மொழிமூல அல்லது எழுத்துமூல விடைக்கான வினாக்கள் அவ்வமைச்சருக்கு தொடர்புபடுத்தப்படலாம். பாராளுமன்ற அரசாங்க கட்சியின் முதற்கோலாசான் ஊடாக உரிய வினாக்கள் சமர்ப்பிக்கப்படும். வாய்மொழிமூல விடை தேவைப்படும் ஏதேனும் கேள்வி ஒழுங்குப்பத்திரத்தைச் சென்றடையும்போது, அதன் பொருட்டு விடையளிப்பது அமைச்சரானவரின் பொறுப்பாகும்.

## நான்காம் அத்தியாயம்
## அமைச்சரவைத் தீர்மானங்கள், அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் அது சார்ந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழி

### பொது

4.1 பொதுவாக நோக்குகையில் அமைச்சரவைத் தீர்மானங்கள், அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் அது சார்ந்த ஆவணங்கள் இரகசிய ஆவணங்களாக கருதப்படும். ஆயினும், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிந்துக் கொள்ளும் உரிமைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த சட்டத்தின் 5 ஆம் பிரிவின் மூலம் விதிக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டு, அத்தகைய ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு பிரசைகளானவர்களுக்கு உரிமை கிடைக்கப்பெறும். அத்துடன் இந்த சட்டத்தின் 5(1) ஆம் பிரிவுக்கு அமைவாக தீர்மானம் எடுக்கப்படாத அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பில் செய்யப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

4.2 பொதுவாக அமைச்சரவை அலுவலகம், அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள உரிய அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் அமைச்சரவைத் தீர்மானங்களினதும் பத்திரங்களினதும் அது சார்ந்த ஆவணங்களினதும் உரிமை கையளிக்கப்பட்டுள்ளது.

4.3 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிந்துக் கொள்ளும் உரிமைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், ஏதேனும் அமைச்சரவைப் பத்திரமொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் குறித்த கால கட்டத்திற்கு பொது மக்களுக்கு வழங்குவது பொருத்தமற்றதென தீர்மானிக்குமாயின், அது தொடர்பிலான காரணங்களுடனான விசேட குறிப்பொன்று குறித்த அமைச்சரவைப்பத்திரத்தில் பிரேரிப்புகளின் அல்லது சிபாரிசுகளின் பின்னர் அமைச்சரின் உடன்பாட்டுடன் இடுவதற்கு அமைச்சின் செயலாளினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 அமைச்சரவையினால் அதற்கமைவாக நடவடிக்கை எடுப்பதனை அங்கீகரித்தால், அத்தகைய தீர்மானமொன்று சம்பந்தமாக பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்படும் வரையறைகள் உரிய அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடுவதற்கு அமைச்சரவைச் செயலாளரினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**அமைச்சர்கள் மற்றும் உத்தியோகத்தர்களினால் அமைச்சரவைத் தீர்மானங்கள், அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் அது சார்ந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழி**

4.5 அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர்களுக்கு அலுவலக நோக்கம் கருதி ஆரம்ப அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்த தொடர்புபட்ட அமைச்சிடமிருந்து அமைச்சரவைப் பத்திரங்கள், அது தொடர்பான தீர்மானங்கள் மற்றும் அது சார்ந்த ஆவணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

4.6 உரிய ஆவணம் குறித்த அமைச்சிடம் இல்லையாயின் உரிய அமைச்சின் செயலாளரினால் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவைச் செயலாருக்கு கோரிக்கைகளை முன்வைக்கவேண்டுமென்பதோடு அதற்கமைவாக உரிய ஆவணங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அலுவகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

*****************